05.05.15

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## மேகி உள்பட 4 வகை நூடுல்ஸுக்கு தமிழகத்தில் தடை: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு



நெஸ்லே நிறுவனத்தின் மேகி உள்பட பிரபலமான நான்கு வகையான நூடுல்ஸ்களுக்கு தமிழகத்தில் தடை விதிக்கப்படுவதாக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார். இந்தத் தடையானது, மாநிலத்தில் மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் மேகி நூடுல்ஸுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், தமிழகத்தில் மேகி நூடுல்ஸ் மாதிரிகளைச் சேகரித்துப் பரிசோதனை செய்யுமாறு தமிழக உணவு பாதுகாப்புத் துறை அலுவலர்களுக்கு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டிருந்தார்.

தமிழகத்தில் 65 உணவு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவை சென்னை, சேலம், கோவை, மதுரை, திருநெல்வேலி ஆகிய நகரங்களில் உள்ள உணவுப் பாதுகாப்புத் துறைக்குச் சொந்தமான ஆய்வகங்களில்

சோதனைக்கு உள்ளாக்கப்பட்டன. மேகி நூடுல்ஸ்களில் சுவையை அளிக்கும்

மோனோசோடியம் குளுட்டாமேட் என்ற ரசாயனப் பொருள், ஈயத்தின் அளவு அனுமதிக்கப்பட்ட அளவைக் காட்டிலும் அதிகமாக உள்ளதா என அறிய உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில், தமிழகத்தில் மேகி உள்பட நான்கு நிறுவனங்களின் நூடுல்ஸ்களுக்கு தடை விதித்து முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.

இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு:

தமிழகம் முழுவதும் 65 உணவு மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டன. சென்னையில் எடுக்கப்பட்ட 17 உணவு மாதிரிகளில் ஏழு மாதிரிகளில் பரிசோதனைக்குப் பிறகு ஆய்வக முடிவுகள் பெறப்பட்டுள்ளன. இந்த ஏழு மாதிரிகளில் ஆறு மாதிரிகளில் ஈயத்தின் அளவு உணவுப் பாதுகாப்புச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள 10 லட்சத்துக்கு 2.5 பகுதிகள் என்ற அளவை விட அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

**எந்தெந்த நூடுல்ஸ் வகைகள்?**

மேகி நூடுல்ஸ் (Maggi Noodles), வாய் வாய் எக்ஸ்பிரஸ் நூடுல்ஸ் (Wai Wai Xpress Noodles), ரிலையன்ஸ் செலக்ட் இன்ஸ்டன்ட் நூடுல்ஸ் (Reliance Select Instant Noodles), ஸ்மித் அண்டு ஜோன்ஸ் சிக்கன் மசாலா நூடுல்ஸ் (Smith and Jones Chicken Masala Noodles) ஆகியவற்றில் அனுமதிக்கப்பட்ட அளவைவிட ஈயத்தின் அளவு அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டது. இதையடுத்து சட்டப்படியான நடவடிக்கைகளை எடுக்கும்படி அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டது.

அதன்படி, உணவுப் பாதுகாப்பு-தர நிர்ணயச் சட்டத்தின் கீழ், நான்கு நிறுவனங்களும் நூடுல்ஸ் உணவுப் பொருள்களைத் தமிழகத்தில் தயாரிப்பதற்கும், சேமித்து வைக்கவும், விற்பனை செய்யவும் முதல்கட்டமாக மூன்று மாதங்களுக்கு நிறுத்தி வைத்து, உணவுப்

பாதுகாப்பு ஆணையாளர் உத்தரவிட்டுள்ளார். மேலும், இந்த வகை உணவுப் பொருள்களை விற்பனையில் இருந்து உடனடியாக திரும்பப் பெறுவதற்கும் சம்பந்தப்பட்ட உற்பத்தி நிறுவனங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று தனது அறிவிப்பில் முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

தில்லி, கேரளம் உள்ளிட்ட சில மாநிலங்களில் மேகி நூடுல்ஸுக்கு ஏற்கெனவே தடை விதிக்கப்பட்டுள்ளது. இந்தத் தடை இப்போது தமிழகத்திலும் விதிக்கப்பட்டுள்ளது. சென்னையைத் தவிர்த்து, தமிழகத்தின் இதர நான்கு நகரங்களில் மேகி நூடுல்ஸின் மாதிரிகள் சோதிக்கப்பட்டுள்ளன. இதன் ஆய்வு அறிக்கைகள் வெள்ளிக்கிழமை கிடைக்கப் பெற உள்ளன. இந்த ஆய்வு அறிக்கைகளுக்கு முன்பாகவே, சென்னை ஆய்வு மையத்தில் கிடைத்த அறிக்கையின் அடிப்படையில் தமிழகத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**குறுவை சாகுபடிக்கு ரூ.41 கோடியில் திட்டங்கள்: முதல்வர் ஜெயலலிதா அறிவிப்பு**



குறுவை நெல் சாகுபடியை, காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகள் மேற்கொள்ள வசதியாக ரூ.41 கோடியில் தொகுப்புத் திட்டங்களைச் செயல்படுத்த முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இதன்படி, 5 அம்சத் திட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இது குறித்து முதல்வர் ஜெயலலிதா வியாழக்கிழமை வெளியிட்ட அறிவிப்பு:

காவிரி டெல்டா விவசாயிகள் குறுவை நெல் சாகுபடியை மேற்கொள்ள வசதியாக, கடந்த மூன்று ஆண்டுகளாக வழங்கியது போன்று, இந்த ஆண்டும் டெல்டா மாவட்டங்களில் விவசாயத்துக்கு 12 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்படும்.

டெல்டா பகுதிகளில் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி அதிக பரப்பில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்வதற்கான முயற்சிகளை அரசு எடுக்கும். நெல் நடவுப் பணிகளையும், களை கட்டுப்பாட்டுப் பணிகளையும் உரிய காலத்தில் மேற்கொள்ளவும், பயிர் எண்ணிக்கையைப் பராமரித்து, குறைந்த நீரில் அதிக பரப்பில் திருத்திய நெல் சாகுபடி முறையைப் பின்பற்றி மகசூலை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்காக, நடவு இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணிகளை மேற்கொள்ள டெல்டா விவசாயிகள் ஊக்குவிப்படுவர்.

தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள், வேளாண் பொறியியல் துறை ஆகியவற்றின் மூலம் நடவு இயந்திரங்களை வாடகைக்குப் பெற்று தேவையின் அடிப்படையில் விவசாயிகளின் வயல்களில் நடவுப் பணி மேற்கொள்ளப்படும். இதற்கு விவசாயிகள் எந்தவிதக் கட்டணமும் செலுத்தத் தேவையில்லை. இதற்கென அரசுக்கு ரூ.25 கோடி செலவு ஏற்படும். டெல்டா பகுதியில் மேற்கொள்ளப்படும் குறுவை சாகுபடியின் மகசூலை உயர்த்தும் வகையில் நெல் நுண்ணூட்டக் கலவை, உயிரி உரங்கள் ஆகியவற்றை விவசாயிகள் பயன்படுத்த ஊக்குவிக்கும் வகையில் ஏக்கருக்கு ரூ.315 வீதம் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இதனால் அரசுக்கு ரூ.7.87 கோடி செலவு ஏற்படும்.

வேளாண் உற்பத்தியை அதிகரிக்கும் ஓர் உத்தியாக மாநிலம் முழுவதும் மண் பரிசோதனை செய்யப்பட்டு விவசாயிகளுக்கான ஒருங்கிணைந்த கையேடு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. இதில், தமிழகம் முன்னோடி மாநிலமாக விளங்கி வருகிறது. இந்த மண் பரிசோனை ஆய்வின் அடிப்படையில், டெல்டா பகுதிகளில் சுமார் 50 ஆயிரம் ஏக்கர் பரப்பில் மண்வளம் மேம்படுத்தப்பட வேண்டும்.

இதற்கான ஜிப்சம், விவசாயத் துறை மூலம் விவசாயிகளுக்கு விலை ஏதுமின்றி வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ரூ.3 கோடி செலவு ஏற்படும். இப்போது அறிவிக்கப்பட்டுள்ள குறுவை தொகுப்பு உதவித் திட்டத்துக்காக அரசுக்கு ரூ.40.97 கோடி செலவாகும். டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி குறித்த ஆய்வுக் கூட்டம் கடந்த 2 ஆம் தேதியன்று சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் குறுவை சாகுபடிக்கான தொகுப்புத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டதாக அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேட்டூர் அணை திறப்பு எப்போது?: மேட்டூர் அணை எப்போது திறக்கப்படும் என்பது குறித்து முதல்வர் ஜெயலலிதா விளக்கம் அளித்துள்ளார். இது குறித்து வியாழக்கிழமை அவர் வெளியிட்ட அறிவிப்பு: மேட்டூர் அணையைத் திறப்பது தொடர்பான ஆய்வுக் கூட்டம் எனது தலைமையில் கடந்த 2 ஆம் தேதி நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள் ஓ.பன்னீர்செல்வம், நத்தம் ஆர்.விஸ்வநாதன், ஆர்.வைத்திலிங்கம் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலாளர் ஞானதேசிகன் உள்ளிட்ட அதிகாரிகளும் பங்கேற்றனர். மேட்டூர் அணையின் முழுக் கொள்ளளவான 120 அடியில் குறைந்தபட்சம் 90 அடி தண்ணீர் இருக்கும் போது குறுவை நெல் சாகுபடிக்காக ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும். இப்போது மேட்டூர் அணையின் நீர்மட்டம் 72.62 அடியாகவும், நீர் வரத்து நொடிக்கு 7 ஆயிரத்து 58 கன அடியாகவும் உள்ளது. காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி 10 டி.எம்.சி., அடி தண்ணீரை கர்நாடகம் தமிழகத்துக்கு ஜூன் மாதத்தில் தர வேண்டும். காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பின்படி, கர்நாடகத்தில் இருந்து தண்ணீர் கிடைத்தாலும் மேட்டூர் அணையில் ஜூன் இறுதியில் 79 அடி மட்டுமே தண்ணீர் இருக்கும். எனவே, இந்த நிலையில், குறுவை நெல்

சாகுபடிக்காக ஜூன் 12 ஆம் தேதி மேட்டூர் அணையை திறக்க இயலாது என ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

**தேவை இயற்கையோடு இணைந்த அறிவியல்**

அறிவியல் வளர்ச்சியால் நவீன தொழில்நுட்பங்கள் அதிகரித்தன. இதனால், உலகம் முழுவதும் தகவல் தொடர்பு, போக்குவரத்து வசதி, சரக்குப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு துறைகளும் அதிவேக வளர்ச்சி கண்டுள்ளன. வசதிகள் அதிகரிக்கும் அதேசமயம், சுற்றுச்சூழல் சீர்கேடுகளும் அதிகரித்து வருகின்றன. இதனால் நிலம், நீர், காற்று மண்டலம் பாதிக்கப்படுவதுடன், இயற்கை வளங்களும் சுரண்டப்படுகின்றன.

நிலத்தடி நீர் அதிக அளவு உறிஞ்சப்பட்டு விட்டதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருவதுடன், பல்வேறு கழிவுகளால் மாசடைந்தும் வருகிறது. மக்காத பொருள்கள், ரசாயனக் கழிவுகள், பல்வேறு திடக் கழிவுகளால் நிலம் மாசடைந்து வருகிறது. வாகனங்கள், தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் நச்சுப் புகை உள்ளிட்டவற்றால் காற்று மண்டலம் மாசடைந்து வருகிறது. இவ்வாறு அனைத்தும் மாசடைவதால் ஓசோன் படலத்தில் பாதிப்பு, புவி வெப்பமயமாதல், அதன் காரணமாக பனிப் பாறைகள் உருகி கடல் நீர் மட்டம் உயர்வடைதல், விளைநிலங்கள் பாழடைதல், விவசாயத்துக்கும், குடிக்கவும் உதவாத வகையில் மாசடைந்து வரும் நீர் உள்ளிட்டவை ஏற்படும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. நிலம், நீர், காற்று மாசுபாடு மட்டுமன்றி அறிவியல் ஆராய்ச்சிகளின் விளைவால் கதிர்வீச்சு, ரசாயனக் கழிவுகள் சார்ந்த பாதிப்புகள் அதிகரித்துள்ளன. கடல் நீர் மாசடைந்து, கடல் வாழ் உயிரினங்கள் பாதிக்கவும் நேரிடுகிறது. கனிம வளங்கள் கண்டறியப்பட்டு தாதுப் பொருள்கள் வெட்டியெடுக்கப்படும்போது மரங்கள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் அழிக்கப்படுகின்றன. குறிப்பாக, வனப் பகுதிகள் அதிக

அளவில் அழிக்கப்படுகின்றன. அதனால், மழை வளம் குறைந்து, வெப்ப அளவும் அதிகரிக்கிறது. கட்டுமானப் பணிகளுக்காக மலைப் பகுதிகள் சுரண்டப்படுகின்றன. எரிசக்தியின் தேவை அதிகரித்து வருவதால் உற்பத்தியும் அதிகரித்து வருகிறது. அதேசமயம் எரிசக்தி உற்பத்தியால், குறிப்பாக அனல் மின் உற்பத்தியின்போது ஏராளமான சூழல் பாதிப்புகள் ஏற்படுகின்றன.

கரியமில வாயுவை உமிழும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் அதேசமயம், அவற்றை உட்கொண்டு பிராண வாயுவைத் தரும் மரங்களின் எண்ணிக்கை பெருமளவு குறைந்து விட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

உலக சுற்றுச்சூழல் தினம் ஜூன் 5-ஆம் தேதி உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அப்போது சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வுப் பிரசாரங்கள், விழிப்புணர்வுக் கலை நிகழ்ச்சிகள், ஊர்வலங்கள், துண்டுப் பிரசுரம் விநியோகித்தல், கடற்கரைப் பகுதிகளில் தூய்மைப்படுத்துதல், மரக் கன்றுகள் நடுதல் உள்ளிட்டவை நடைபெறுவது வழக்கம். ஆனால், அதன்பின் சுற்றுச்சூழல் நடைமுறைகள் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. தொடரப்படுவது மிகவும் குறைவே. உலக சுற்றுச்சூழல் தினமானது அன்று ஒருநாள் மட்டும் நடைபெறும் ஒரு சம்பிரதாய தினமாக ஆகிவிடக் கூடாது.

சுற்றுச்சூழல் தினத்தைத் தொடர்ந்து, சைக்கிள் பயன்பாட்டை அதிகரிப்பது, மரம் நட்டு பராமரிப்பது, மின் சிக்கனம், பாலிதீன் பைகளுக்கு மாற்றாக துணிப் பைகளைப் பயன்படுத்துவது உள்ளிட்ட சூழலுக்கு ஆதரவான பணிகளை மேற்கொள்ள அனைவருமே முயற்சிக்க வேண்டும்.

சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு என்று உறுதியான சட்டம் இருப்பதாகத் தெரியவில்லை. தற்போது பன்னாட்டு அளவில் உள்ள சுற்றுச்சூழல் சட்டங்கள் அனைத்துமே, சூழலை எந்த அளவு மாசுபடுத்தலாம் என்று கூறுகின்றனவே தவிர, மாசடையாமல் இருப்பதற்கான விதிகளை

வகுக்கவில்லை.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது அறிவியலுக்கும், தொழில் வளர்ச்சிக்கும் எதிரானது என குற்றச்சாட்டுகள் எழுப்பப்படுகின்றன. ஆனால், தொழில் வளர்ச்சி அதிகரித்த கடந்த இருநூறு ஆண்டுகளில்தான் சுற்றுச்சூழல் பாதிப்பு பன்மடங்கு அதிகரித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் அதிகரித்த கரியமில வாயுவால்தான் புவி வெப்பமயம் ஆனதுடன், பருவநிலை மாற்றமும் ஏற்பட்டுள்ளது.

சுற்றுச்சூழல் சீர்கேடு குறித்து அரசு மீது நாம் குறைகூறுகிறோம். ஆனால், மக்கும் குப்பை, மக்காத குப்பை எனத் தரம் பிரித்து வெளியேற்றுவது போன்ற செயல்களில் நாம் ஈடுபடுவது மிகவும் குறைவு. அதுபோல் சுற்றுச்சூழல் குறித்து பொதுமக்களுக்கு அறிவுரை வழங்கும் அரசு, பொதுமக்களுக்கு உரிய வசதிகளையும் செய்ய வேண்டும்.

உதாரணமாக தூய்மைப் பகுதி, அசுத்தம் செய்யாதீர் என அறிவுறுத்தும் அரசு பொதுமக்களுக்கு ஆங்காங்கே பொதுக் கழிப்பிட வசதியையும் செய்துதர வேண்டும். அப்போதுதான் தூய்மைப் பகுதி தூய்மையாக இருக்கும்.

பாலிதீன் பைகளுக்குத் தடைவிதித்து அவை கடைகளில் விற்கப்படுகின்றனவா என ஆய்வு செய்யும் அதிகாரிகள், பாலிதீன் உற்பத்தி நிறுவனங்களுக்குச் சென்று, உற்பத்தியைத் தடுத்து நிறுத்தினால் பாலிதீன் பைகளால் ஏற்படும் சூழல் சீர்கேட்டை முழுமையாகத் தடுக்கலாம். சுற்றுச்சூழல் மாசு குறித்து நாடுகள் அனைத்தும் அடுத்த நாட்டின் மீது பழிபோடுவதிலேயே முனைப்பாக உள்ளன.

மனிதனின் பேராசையே இயற்கை வளங்களின் அழிவுக்குக் காரணமாகும். "மனிதனின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு இயற்கை வளங்கள் உள்ளன; பேராசையைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு அல்ல' என்ற மகாத்மா காந்தியின் கூற்று இன்றைய காலகட்டத்துக்கு

மிகவும் பொருத்தமானதாகும். நமது முன்னோர்கள் இயற்கையை வழிபட்டனர். மரங்களைத் தெய்வமாகவும், நதிகளையும், பூமியையும் தாயாகவும், வாயுவையும், நெருப்பையும் இறைவனாகவும் கருதியவர்கள் நமது முன்னோர்கள்.

அதே உள்ளுணர்வுடன் இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் அமையுமானால் அது சுற்றுச்சூழலுக்கு நன்மை பயப்பதாகவே அமையும்.

**தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு: சென்னையில் 100 டிகிரி வெயில்**

தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் வெள்ளிக்கிழமை (ஜூன் 5) இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது: வியாழக்கிழமை காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில், தமிழகத்தில் பரவலாக மழை பதிவாகியுள்ளது. குறிப்பாக, தூத்துக்குடி மாவட்டம் ஸ்ரீவைகுண்டம், திண்டுக்கல் மாவட்டம் வேடசந்தூர் ஆகிய இடங்களில் அதிகபட்சமாக தலா 80 மி.மீட்டர் மழை பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக மதுரை மாவட்டம், மேட்டுப்பட்டியில் 70 மி.மீ, கழுகுமலை, சிட்டாம்பட்டி, கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டி ஆகிய இடங்களில் தலா 50 மி.மீ, தக்கலை, குளித்துறையில் தலா 40 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

வெப்பச் சலனம் காரணமாக, கடந்த சில நாள்களாக தமிழகம், ஆந்திரம், லட்சத்தீவு ஆகிய இடங்களில் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக, தமிழகத்தின் வட மாவட்டங்களில் பலத்த மழை பதிவாகியது.

இந்த நிலையில், லட்சத்தீவு கடல் பகுதியில் காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. அந்தத் தாழ்வு நிலையானது, தற்போது அதே இடத்தில் நீடிக்கிறது. இதன் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி

நேரத்தில் ஒரு சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும். சென்னை மாநகரில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை முறையே 99, 84 டிகிரி ஃபாரன்ஹீட்டாக இருக்கும். சென்னையில் 100 டிகிரி: வெப்ப நிலையைப் பொருத்தமட்டில், தமிழகத்தில் வியாழக்கிழமை சென்னை விமான நிலையத்தில் அதிகபட்சமாக 100 டிகிரி ஃபாரன்ஹீட் அளவுக்கு வெயில் பதிவாகியது. அக்னி நட்சத்திரம் காலம் முடிவடைந்த பின்னர், தொடர்ந்து 2-ஆவது நாளாக 100 டிகிரி அளவுக்கு சென்னை மாநகரில் வெயில் பதிவாகியுள்ளது. அதற்கு அடுத்தபடியாக கரூர் பரமத்தி, சென்னை நுங்கம்பாக்கம், பாளையங்கோட்டையில் 98 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியது. மற்ற மாவட்டங்களில் 98 டிகிரிக்கும் குறைவாகவே வெயில் பதிவாகியதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**தமிழகத்தில் வறுமை ஒழிப்பு- வேளாண்மை புதுப்பித்தலுக்கு சிறப்பு பணிக் குழுக்கள்**

நீதி ஆயோக் (மத்திய கொள்கைக் குழு) அறிவுறுத்தல்படி, தமிழகத்தில் வறுமை ஒழிப்பு, வேளாண்மை ஆகியவற்றை புதுப்பித்தலுக்கான சிறப்பு பணிக் குழுக்களை தமிழக அரசு அமைத்துள்ளது. இந்த அமைப்பானது, புதிய திட்டங்களை, ஆலோசனைகளை தமிழக அரசின் சார்பில் நீதி ஆயோக் அமைப்புக்கு வழங்கும். இதுகுறித்து தமிழக தலைமைச் செயலாளர் கே.ஞானதேசிகன் வெளியிட்ட அரசாணை:

நீதி ஆயோக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, இந்தியாவில் வறுமையை ஒழிப்பதற்கான பணிக் குழுவை ஒவ்வொரு மாநிலமும் அமைப்பதற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. அந்தப் பணிக் குழுவின் தேசிய தலைவராக நீதி ஆயோக்கின் துணைத் தலைவர் இருக்கிறார். மாநிலத்தில் நியமிக்கப்படும் பணிக் குழுவுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக தேசிய அளவிலும் பணிக் குழு

அமைக்கப்பட்டுள்ளது.

வறுமை ஒழிப்புக்கான மாநில பணிக் குழுவின் தலைவராக தமிழக அரசின் திட்டம், மேம்பாடு- சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மைச் செயலாளர் இருப்பார். மேலும், நகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் துறையின் முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி- ஊராட்சித் துறை செயலாளர், சிறு, குறு, நடுத்தர தொழில்கள் துறை செயலாளர், தொழிலாளர்- வேலைவாய்ப்புத் துறை செயலாளர், நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலை வாய்ப்பு, பயிற்சி இயக்குநர், ஊரக வளர்ச்சி- ஊராட்சித் துறை இயக்குனர், புதுவாழ்வு திட்ட இயக்குநர், மாநில திட்ட ஆணையத்தின் கோட்டத் தலைவர் ஆகியோர் உறுப்பினர்களாகவும், மாநில திட்ட ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் ஒருங்கிணைப்பாளராகவும் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த பணிக் குழு, தமிழகத்தில் வறுமை ஒழிப்புக்கான திட்டங்களை வடிவமைப்பது குறித்தும், அதை செயல்படுத்துவது குறித்தும் திட்டமிடும். இந்தத் திட்டங்கள் குறித்த அறிக்கையை வரும் 15-ஆம் தேதிக்குள் இறுதி செய்ய வேண்டும். வேளாண் மறுமலர்ச்சி: தமிழகத்தில் விவசாயத்தை அனைத்து வகையிலும் மீண்டும் புனரமைப்பதற்காகவும், அதில் புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டு வந்து மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காகவும் பணிக் குழு நியமிக்கப்படுகிறது.

இந்தக் குழுவின் தலைவராக தமிழக அரசின் திட்டம், மேம்பாடு- சிறப்பு முயற்சிகள் துறையின் முதன்மைச் செயலாளர் இருப்பார். மாநில திட்ட ஆணையத்தின் உறுப்பினர் (விவசாயம், பாசனம்), வேளாண்மைத் துறைச் செயலாளர், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளார், கால்நடை, பால்வளம், மீன் வளத் துறை செயலாளர், வருவாய்த் துறை செயலாளர், வேளாண்மை இயக்குனர், தோட்டக்கலை- தோட்டப் பயிர்கள் இயக்குநர், வேளாண்மை சந்தை- தொழில்கள் இயக்குநர், வேளாண்மை தலைமைப் பொறியாளர், வேளாண்மை பல்கலைக்கழக

பதிவாளர் ஆகியோர் உறுப்பினர்களாக இருப்பர். மாநில திட்டக் கமிஷனின் உறுப்பினர் செயலாளர் ஒருங்கிணைப்பாளராகவும் செயல்படுவார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அலங்காநல்லூர் பகுதியில் இடியுடன் பலத்த மழை**

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர், பாலமேடு பகுதிகளில் புதன்கிழமை மாலை இடியுடன் கூடிய பலத்த மழை பெய்துள்ளது. சாத்தியாறு அணைப்பகுதியில் 21 மி.மீ, சர்க்கரை ஆலை, மேட்டுப்பட்டி பகுதியில் 5 மி.மீ பதிவாகியுள்ளது.

இதில் அலங்காநல்லூர் அருகே மாட்டுக்கொட்டத்தில் இடி விழுந்தததில் தீ பிடித்து சேதமடைந்தது. அலங்காநல்லூரில் உள்ள செல்லிடப்பேசி கோபுரங்கள் பாதிப்பு ஏற்பட்டது. இதேபகுதியில் உள்ள அரசுடமை வங்கி ஒன்றில் இடி அதிர்வினால் எச்சரிக்கை மணி ஒலித்து பரபரப்பை ஏற்படுத்தியது. இடியினால் அப்பகுதியில் 20க்கும் மேற்பட்ட தொலைக்காட்சி பெட்டிகள் பழுதடைந்தன.

**விருதுநகர் பகுதியில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை**

விருதுநகர் பகுதியில் வியாழக்கிழமை கடும் வெயில் நிலவி வந்த நிலையில், மாலையில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

விருதுநகர் பகுதியில் வியாழக்கிழமை காலை முதல் மாலை 4 மணி வரையில் கடும் வெயில் வாட்டி வதைத்தது. இதனால், சாலைகளில் பொதுமக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில், மாலையில் திடீரென கருமேகம் சூழ்ந்து, இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சிறிது நேரத்தில் ஆலங்கட்டி மழை பெய்யத் தொடங்கியது. இதை, பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை ஆர்வத்துடன் எடுத்தனர். சிலர் பாத்திரங்களில் சேகரித்தும் வைத்தனர். அரை மணி நேரம் நீடித்த இம்மழையால், சாலைகளில் மழை

நீர் வெள்ளம் போல் ஓடியது. இம்மழையால், குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது. கழிவு நீர் குளம்: நகரின் பல்வேறு பகுதிகளில் மழை நீருடன் கழிவுநீரும் கலந்து சென்றது. விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் மழை நீருடன் கழிவுநீரும் கலந்து குளம் போல் தேங்கியது. அதில் மீன்களும் வந்ததால், பேருந்துக்காக காத்திருந்த மாணவர்கள் மீன்களைப் பிடித்து குதூகலித்தனர்.

இந்நிலையில், மராமத்துப் பணிகள் ஏதும் நடைபெறாமல் பேருந்து நிலையம் குண்டும், குழியுமாக இருப்பதால், மாணவ, மாணவிகள் மற்றும் பயணிகள் பேருந்தில் ஏற முடியாமல் சிரமப்பட்டனர்.

**விருதுநகர் பகுதியில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை**

விருதுநகர் பகுதியில் வியாழக்கிழமை கடும் வெயில் நிலவி வந்த நிலையில், மாலையில் பலத்த காற்றுடன் ஆலங்கட்டி மழை பெய்தது.

விருதுநகர் பகுதியில் வியாழக்கிழமை காலை முதல் மாலை 4 மணி வரையில் கடும் வெயில் வாட்டி வதைத்தது. இதனால், சாலைகளில் பொதுமக்களின் நடமாட்டம் வெகுவாகக் குறைந்து காணப்பட்டது. இந்நிலையில், மாலையில் திடீரென கருமேகம் சூழ்ந்து, இடி மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சிறிது நேரத்தில் ஆலங்கட்டி மழை பெய்யத் தொடங்கியது. இதை, பெரியவர்கள் முதல் சிறுவர்கள் வரை ஆர்வத்துடன் எடுத்தனர். சிலர் பாத்திரங்களில் சேகரித்தும் வைத்தனர். அரை மணி நேரம் நீடித்த இம்மழையால், சாலைகளில் மழை நீர் வெள்ளம் போல் ஓடியது. இம்மழையால், குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை நிலவியது. கழிவு நீர் குளம்: நகரின் பல்வேறு பகுதிகளில் மழை நீருடன் கழிவுநீரும் கலந்து சென்றது. விருதுநகர் பழைய பேருந்து நிலையத்தில் மழை நீருடன் கழிவுநீரும் கலந்து குளம் போல் தேங்கியது. அதில் மீன்களும் வந்ததால், பேருந்துக்காக காத்திருந்த மாணவர்கள்

மீன்களைப் பிடித்து குதூகலித்தனர். இந்நிலையில், மராமத்துப் பணிகள் ஏதும் நடைபெறாமல் பேருந்து நிலையம் குண்டும், குழியுமாக இருப்பதால், மாணவ, மாணவிகள் மற்றும் பயணிகள் பேருந்தில் ஏற முடியாமல் சிரமப்பட்டனர்.

**தென் மாவட்டங்களில் சராசரியைக் காட்டிலும் குறைவான அளவே மழை பொழியும்**

தமிழகத்தின் தென் மாவட்டங்களில் சராசரியைக் காட்டிலும் குறைவான அளவிலேயே தென்மேற்கு பருவமழை பொழியும் என்று தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக காலநிலை ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தமிழகத்தில் எதிர் வரக்கூடிய 2015-ம் ஆண்டின் தென்மேற்குப் பருவ மழைக் காலத்துக்கான (ஜூன் முதல் செப்டம்பர் வரை) மழை குறித்த முன்னறிவிப்பு செய்வதற்காக, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலுள்ள வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையத்தில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக மார்ச், ஏப்ரல் மாதங்களில் பசிபிக் பெருங்கடலில் பூமத்திய ரேகையை ஒட்டியுள்ள கடல்பகுதியின் மேற்பரப்பு நீரின் வெப்பநிலை, தென் மண்டல காற்றழுத்தக் குறியீடு ஆகியவற்றை வைத்து ஆஸ்திரேலிய நாட்டிலிருந்து பெறப்பட்ட கணினி மென்பொருளைக் கொண்டு தென்மேற்குப் பருவமழை முன்னறிவிப்பு பெறப்பட்டுள்ளது. அதன்படி, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் எதிர்பார்க்கப்படும் 60 சதவீத வாய்ப்புக்கான மழையளவு வழங்கப்பட்டுள்ளது.

சராசரி மழை அளவு எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள்: அரியலூர், சென்னை, கடலூர், தருமபுரி, திண்டுக்கல், காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், நீலகிரி, பெரம்பலூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சை, திருவள்ளூர், திருவண்ணாமலை, திருச்சி, வேலூர், விழுப்புரம்.

சராசரி மழை அளவை ஒட்டிய மழை எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள்: கோவை, ஈரோடு, கரூர், மதுரை, தேனி, திருப்பூர். சராசரி அளவைக் காட்டிலும் குறைவான மழை எதிர்பார்க்கப்படும் மாவட்டங்கள்: நாகப்பட்டினம், ராமநாதபுரம், சிவகங்கை, திருநெல்வேலி, திருவாரூர், தூத்துக்குடி, விருதுநகர். இதில் சராசரி மழை அளவு என்பது நீண்ட கால மழை அளவில் இருந்து 10 சதவீதம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ பெய்யக் கூடும். சராசரியை ஒட்டிய மழை அளவு என்பது நீண்ட கால சராசரி மழை அளவில் இருந்து 11 முதல் 20 சதவீதம் வரை குறைவு. சராசரியைவிட குறைந்த மழை அளவு என்பது நீண்ட கால சராசரி அளவில் இருந்து 20 சதவீதத்துக்கும் குறைவாகப் பெய்வது என்று வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

**அனைத்து உணவுப் பொருள்களையும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும்**

மேகி மட்டுமன்றி அனைத்து நிறுவனங்களின் நூடுல்ஸ், சாக்லேட் உள்ளிட்ட உணவுப் பொருள்களையும் உரிய முறையில் பரிசோதனைக்கு உட்படுத்த உணவுப் பாதுகாப்புத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என, புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி கூறினார்.

இதுகுறித்து வியாழக்கிழமை கோவையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி:

நெஸ்லே நிறுவனத்தின் தயாரிப்புகளில் ஒன்றான மேகி நூடுல்ஸில் அதிக அளவு ரசாயனம் கலந்திருப்பதால் உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் தடை செய்யப்பட்டது. ரசாயனம் அதிகம் கலந்த பொருள்களை உண்ணும் போது பல்வேறு பாதிப்புகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

மேலும், பன்னாட்டு நிறுவனங்கள் உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து அறிமுகப்படுத்தும் போது மட்டுமே பரிசோதனை செய்யப்படுகிறது. எனவே, சாக்லேட், சிப்ஸ், நிறத்தை மாற்றும் மருந்துகள், டீத் தூள் உள்ளிட்ட எண்ணற்ற பொருள்கள் அனுமதியின்றி விற்பனை செய்யப்படுகின்றன. இதுபோன்ற அனைத்துப் பொருள்களையும் உரிய முறையில் மத்திய, மாநில அரசுகள் பரிசோதனை செய்ய வேண்டும். இதில் தரமில்லாத பொருள்களைத் தடை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். உணவுப் பொருள்களின் விளம்பரங்களில் நடிக்கும் நடிகர், நடிகைகள் அவற்றின் தரம் அறிந்து நடிக்க வேண்டும் என்றார்.

**வெள்ளக்கோவிலில் திடீர் மழை**

வெள்ளக்கோவிலில் புதன்கிழமை இரவு திடீர் மழை பெய்தது.

இரவு 8.30 மணிக்கு ஆரம்பித்த மழை ஒரு மணி நேரத்துக்கும் மேலாக நீடித்தது. மிதமான மழையுடன், பலத்த சூறைக் காற்று வீசியது. இதனால் ஆங்காங்கே சில இடங்களில் மின் கம்பங்கள் சாய்ந்தன. மரங்களும் முறிந்து விழுந்தன. இந்த மழையால் மானாவாரியாக எள் பயிரிட்டுள்ள விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**3 ஆண்டுகளுக்குப் பிறகு கோடை மழை அதிகரிப்பு**

மூன்று ஆண்டுகளுக்குப்பின் ஈரோடு மாவட்டத்தில் கோடை மழை அதிகரித்துள்ளது.

கோடை மழை மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை 3 மாதங்களுக்கு நீடிக்கும். பொதுவாகவே ஈரோடு மாவட்டத்தில் கோடை மழை சீசனில் குறைந்தளவிலான மழையே பதிவாகும். 2012-ஆம் ஆண்டில் 127.62 மி.மீ. மழையும், 2013-ஆம் ஆண்டில் 88.62 மி.மீ. மழையும், 2014-ஆம் ஆண்டில் 80.81 மி.மீ. மழையும் மட்டுமே பதிவாகி இருந்தது. இந்த

ஆண்டு யாரும் எதிர்பாராத அளவில் கடந்த மே 28-ஆம் தேதி வரை மாவட்டம் முழுவதும் 204.64 மி.மீ மழைப் பதிவாகி உள்ளது. 2011-ஆம் ஆண்டில் 227.11 மி.மீ. மழைப்பதிவாகி இருந்த நிலையில் 3 ஆண்டுகளுக்கு பிறகு இந்த ஆண்டில் தான் மாவட்டத்தில் கோடை மழை நன்கு பெய்துள்ளது. கோடை மழை பரவலாக பெய்து வருவதால் மானாவாரி பயிர்சாகுபடி மாவட்டம் முழுவதும் தீவிரமடைந்துள்ளது.

இதுகுறித்து வேளாண் துறை அதிகாரிகள் கூறியதாவது:

மாவட்டம் முழுவதும் ஏப்ரல் மாதம் வரையிலும் 96.80 மி.மீ. அளவுக்கு இயல்பான மழையளவு பதிவாக வேண்டும். ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 125.86 மி.மீ. வரையிலும் மழையளவு பதிவாகி உள்ளது. கடந்த ஆண்டு இதே ஏப்ரல் மாதத்தில் 119.98 மி.மீ. மழைப்பதிவாகி இருந்தது. ஆனால் இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் இயல்பு மழையை விட 29.06 மி.மீ. மழை அதிகமாக பெய்துள்ளது. கடந்த ஆண்டு மே மாதம் 74.93 மி.மீ., மழை பதிவாகி இருந்த நிலையில் இந்த ஆண்டு மே மாதம் 28-ஆம் தேதி வரை 79.97 மி.மீ. மழை பதிவாகி உள்ளது. கடந்த 29, 30 மற்றும் 31-ஆம் தேதிகளில் மாவட்டம் முழுவதும் பரவலாகவே கனமழை பெய்துள்ள நிலையில் இந்த ஆண்டு மே மாதத்திலும் கூடுதல் மழைப்பதிவாகி இருப்பது ஊர்ஜிதமாகி உள்ளது.

**மொடக்குறிச்சியில் ரூ. 1.73 லட்சத்துக்கு தேங்காய், கொப்பரை ஏலம்**

மொடக்குறிச்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 1.73 லட்சத்துக்கு தேங்காய் மற்றும் கொப்பரை ஏலம் வியாழக்கிழமை நடைபெற்றது.

மொடக்குறிச்சி மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 60 மூட்டைகளில் 1 டன் எடையுள்ள கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை

அதிகபட்ச விலையாக கிலோ ரூ. 78-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 68.05-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்ச விலை ரூ. 60.10-க்கும், குறைந்தபட்ச விலை ரூ. 40.50-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 61 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது. இதேபோல், 5 ஆயிரத்து 782 கிலோ எடையுள்ள 17 ஆயிரத்து 655 தேங்காய்கள் கொண்டு வரப்பட்டன. இதில், அதிகபட்ச விலையாக டன் ஒன்றுக்கு ரூ. 21 ஆயிரத்து 378-க்கும், குறைந்தபட்ச விலையாக ரூ. 17 ஆயிரத்து 758-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 12 ஆயிரத்துக்கு ஏலம் நடைபெற்றது.

## 19-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவண்ணாமலை மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம், ஜூன் 19-ஆம் தேதி நடைபெறுகிறது.மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் காலை 10 மணிக்கு நடைபெறும் கூட்டத்துக்கு ஆட்சியர் அ.ஞானசேகரன் தலைமை வகிக்கிறார். இதில், பல்வேறு துறைகளின் அதிகாரிகள் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கைகள், புகார்களுக்கு விளக்கம் அளிக்கின்றனர். எனவே, திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம். மேலும், விவசாயிகள் தங்களது கோரிக்கை மனுக்களை இந்த மாதம் 15-ஆம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பி வைக்கலாம்.

இதேபோல, மாவட்டத்தின் அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள், வேளாண்மைத் துறை அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள மானிய விண்ணப்பப் பெட்டிகளிலும் விவசாயிகள் தங்களது கோரிக்கை மனுக்களைப் போடலாம். இந்த மனுக்கள் மீது துரித நடவடிக்கை எடுக்கப்பட்டு, குறைதீர் கூட்டத்தின்போது, உரிய பதில் அளிக்கப்படும் என்று ஆட்சியர் அ.ஞானசேகரன் தெரிவித்துள்ளார்.

**தருமபுரியில் அணைகளைப் புனரமைத்து பாசனப் பரப்பை அதிகரிக்கத் திட்டம்**

வறட்சி பாதித்த மாவட்டமான தருமபுரியில் பாசனப் பரப்பை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் பொதுப்பணித் துறை மூலம் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்காக அணைகள் புனரமைக்கப்பட்டு, ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டு செல்ல நடவடிக்கை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநிலத்தில் தருமபுரி, ராமநாதபுரம் மாவட்டங்கள் வறட்சி பாதித்தவை என்பதால், இவ்விரு மாவட்டங்களில் விவசாயம் உள்ளிட்ட பணிகள் மூலம் மக்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தித் தரும் நோக்கில் மறைந்த முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் பயனாக, அவரது ஆட்சிக் காலத்தில் வாணியாறு, சின்னாறு, தொப்பையாறு, நாகாவதி, கேசர்குளி அல்லா, தும்பலஅள்ளி, ஈச்சம்பாடி ஆகிய அணைகள் கட்டப்பட்டன.

இதனைத் தவிர்த்து கடந்த 2001ஆம் ஆண்டில் வரட்டாறு அணை கட்டும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இந்த அணைகள் மூலம் மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

மாவட்டத்தில் உள்ள 74 ஏரிகளில் ஜெர்தலாவ் உள்ளிட்ட 15 ஏரிகளுக்கு அணைகளில் இருந்து நீர் நேரடியாகப் பெறப்படுகிறது. எஞ்சிய 59 ஏரிகள் மழைக் காலங்களில் வடிகால்கள் மூலம் நீர்வரத்து பெற்று நிரம்பும் வகையில் உள்ளன.

வீணாகும் மழை நீரைப் பயன்படுத்த நடவடிக்கை: மாவட்டத்தில் ஆண்டொன்றுக்கு கிடைக்க வேண்டியதைக் காட்டிலும் குறைவான அளவு மழை பெய்வதால், சில பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகின்றன.

இந்த நிலையில், சமீபத்தில் கோடை மழை பரவலாகப் பெய்த போதும் மாவட்டத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கவில்லை.

மாறாக, காவிரி ஆற்றில் கலந்து மாவட்ட மக்களுக்கு பயன்படாமல் வீணாகியது.

இதுபோன்ற நிகழ்வைத் தடுத்து வரும் காலங்களில் அணைகளுக்கு நீர்வரத்தை உறுதிப்படுத்த மத்திய அரசு நிதியுதவியுடன் அணைகளைப் புனரமைக்க பொதுப்பணித் துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றன.

அணைகளை புனரமைத்து அதன்மூலம் ஏரிகளுக்கு நிரப்பி பாசனப் பரப்பளவை அதிகரிக்கும் நடவடிக்கையில் மாவட்ட நிர்வாகம் தற்போது தீவிரம் காட்டத் தொடங்கியுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் கூறியது: ஒருங்கிணைந்த தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் விவசாயம், குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கில் 11 அணைகள் கட்டப்பட்டன. தருமபுரியைக் காட்டிலும், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கூடுதல் மழை கிடைப்பதால் அங்குள்ள அணைகள் நிரம்பி, அதன்மூலம் ஏரிகளுக்கும் நீர் கிடைக்கிறது. ஏரிகளில் தொடர்ந்து நீர் இருக்கும் பட்சத்தில் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து விடுகிறது. ஆனால், தருமபுரி மாவட்டத்தில் மழையளவு குறைந்து வருவதோடு, அணைகளுக்கு நீர்வரத்து முற்றிலும் இல்லை என்ற நிலை இருப்பதால், மொரப்பூர் உள்ளிட்ட சில பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. இதனால் அப் பகுதிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தாலும் தண்ணீர் வருவதில்லை.

மாவட்டத்தில் உள்ள அணைகள் அனைத்தும் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட நிலையில், போதிய பராமரிப்பு இல்லாமல் உள்ளன. இந்த அணைகளைப் புனரமைத்து நீரைத் தேக்கி, அதன்மூலம் பாசனப் பரப்பளவை அதிகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்றனர்.

**ஏற்காட்டில் நாளை மலர்க் கண்காட்சி தொடக்கம்**

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் மலர்க் கண்காட்சி ஜூன் 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது. இந்த மலர்க் கண்காட்சியில் சுற்றுலாப் பயணிகளின் கண்களுக்கு விருந்து அளிக்கும் வகையில் 30,000 வண்ண ரோஜா மற்றும் கார்னேசன் மலர்களைக் கொண்டு வெண்மை நிற கொக்கு, யானை, காண்டாமிருகம் மற்றும் இந்தியா கேட் ஆகியவை உருவாக்கப்பட உள்ளன. அண்ணா பூங்கா மலர்க் கண்காட்சி திடலில் உலகில் சிறந்த கொய்மலர்களான ரோஜா, ஜெர்பிரா, ஆந்தூரியம், கார்னேசன், ஆர்கிட்ஸ், டெய்சி, லிமோனியம், அகபேந்தஸ், ரெட்ஹாட்போக்கர், கிரைசான்திமம், அல்ஸ்டோமேரியா, கிலாடியோலஸ், பேர்டு ஆப் பாரடைஸ், லில்லியம், ஹெலிகோனியம், டெல்பீனியம், ஹெலிகிரைசம், துலிப், ஆர்கிட்ஸ் போன்ற மலர்களுடன் கோல்டன் ராட், ஆஸ்டர், நிலச்சம்பங்கி போன்ற மலர்களைக் கொண்டு, 200-க்கும் மேற்பட்ட வடிவங்களில் தோட்டக் கலைத் துறையினரின் கைவண்ணத்தில் மலர் அலங்காரங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

மேலும், 50-க்கும் மேற்பட்ட பல வண்ண மலர் வகைகள், 10,000-க்கும் மேற்பட்ட பூந்தொட்டிகளில் சுற்றுலாப் பயணிகளின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, ஏற்காட்டுக்கே உரித்தான பல வண்ண டேலியா மலர்கள் 1,000 தொட்டிகளில் இவ்வாண்டு கொல்கத்தாவிலிருந்து விதை கிழங்குகள் பெற்று வளர்க்கப்பட்டு, காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அண்ணா பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் பல்வேறு பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கொண்டு விலங்குகள், பறவைகள் மற்றும் மலர்கள் ஆகியவற்றின் உருவங்களை தத்ரூபமாக உருவாக்கி வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களிடையே ஊட்டச்சத்து மிகுந்த காய்கறிகள் உள்கொள்வதை ஊக்கப்படுத்தும் வகையில் மாடித் தோட்டத்தில் காய்கறிகள் வளர்ப்பதை

விளக்கி, மாதிரி மாடி காய்கறித் தோட்டம் காட்சியகப் படுத்தப்பட்டுள்ளது. மலர்க் காட்சியில் பொதுமக்களுக்கு பொழுதுப்போக்கு அம்சம் மட்டுமின்றி, சேலம் மாவட்ட தோட்டக்கலை வளத்தை எடுத்துக் கூறும் வகையில், மாவட்டத்தில் விளையும் அனைத்து வகை பழங்கள், காய்கறிகள், மலர்கள், மலைத் தோட்டப் பயிர்கள் மற்றும் மருத்துவப் பயிர்கள் காட்சியகப்படுத்தப்பட்டுள்ளன என மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் வியாழக்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தா.பழூர் வட்டார விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா**

தா.பழூர் வட்டார விவசாயிகள் திருவாரூர் மாவட்டத்துக்கு கண்டுணர்வு சுற்றுலாவாக அண்மையில் சென்று வந்தனர். அரியலூர் மாவட்டம், தா.பழூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் அட்மா திட்டத்தின் கீழ் திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டம், ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை விவசாயப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் அண்மையில் நடைபெற்ற தேசிய அளவிலான நெல் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.இதில் பாரம்பரிய நெல் வகைகளான சீரகச்சம்பா, மாப்பிள்ளை சம்பா, கிச்சடி சம்பா, சூரக்குறுவை, சேலம் சன்னாசி, சிவப்பு குருவிகார் போன்ற பாரம்பரியமிக்க நெல் ரகங்களையும், அவை பூச்சி நோயை எதிர்த்து வளரும் தன்மை குறித்தும், பாரம்பரிய நெல்லில் அடங்கியுள்ள மருத்துவக் குணங்கள் குறித்தும் விவசாயிகளுக்கு விளக்கிக் கூறப்பட்டது. மேலும் இயற்கை முறையில் பூச்சி நோயைக் கட்டுப்படுத்தும் முறைகளான அமுதக்கரைசல், மூலிகைப்பூச்சிவிரட்டி போன்ற இயற்கை வேளாண் யுக்திகள் குறித்தும் விவசாயிகள் அறிந்து கொண்டனர். கருத்தரங்கில் பங்கேற்ற விவசாயிகளுக்கு 2 கிலோ பாரம்பரிய நெல் விதை வழங்கப்பட்டது. கண்டுணர்வு சுற்றுலாவில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் உள்ளிட்ட விவசாயிகள் 8 பேர் கலந்து கொண்டனர்.

**குறுவை தொகுப்பு உதவித் திட்டத்துக்கு டெல்டா விவசாயிகள் வரவேற்பு**

தமிழக அரசு அறிவித்துள்ள குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தை டெல்டா விவசாயிகள் வரவேற்கின்றனர். இதுகுறித்து அவர்கள் தெரிவித்த கருத்துகள்: தஞ்சை மாவட்ட காவிரி விவசாயிகள் பாதுகாப்புச் சங்கச் செயலர் சுவாமிமலை சுந்தர. விமல்நாதன்: ஆழ்குழாய் வசதி உள்ள விவசாயிகள் குறுவை சாகுபடி செய்வதற்கு வாய்ப்பாக குறுவை தொகுப்பு உதவித் திட்டத்தை அறிவித்ததற்காகத் தமிழக அரசுக்கு நன்றி. இந்தத் திட்டத்தைப் பாகுபாடு, அரசியல் தலையீடு இல்லாமல் செயல்படுத்த வேண்டும். எப்பவெல்லாம் குறுவைக்கு உரிய காலத்தில் தண்ணீர்விட முடியாத சூழல் ஏற்படுகிறதோ, அப்போது காவிரி டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக மத்திய அரசு அறிவிக்க வேண்டும். இதை செய்ய வைக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்குண்டு. கர்நாடகத்திடமிருந்து கிடைக்க வேண்டிய தண்ணீரைக் கேட்டுப் பெற ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளைத் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலர் சாமி. நடராஜன்: கடந்த 3 ஆண்டுகளாக குறுவை சாகுபடி இல்லாமல் போய்விட்டது. இதனால், ஆண்டுக்கு ரூ. 550 கோடி விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுக்கிறது. நிகழாண்டும் ஜூன் 12-ம் தேதி மேட்டூர் அணை திறக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் திறப்பு இல்லை என அரசு அறிவித்திருப்பது ஏமாற்றம் அளிக்கிறது. நடுவர் மன்ற இறுதி தீர்ப்புப்படி ஜனவரி முதல் மே மாதம் வரை 12.5 டி.எம்.சி. தண்ணீரையும், ஜூன் மாதம் தர வேண்டிய 10.5 டி.எம்.சி. தண்ணீரையும் கர்நாடகத்திடமிருந்து கேட்டுப் பெற்று மேட்டூர் அணை திறந்திருக்கலாம். அதற்கான முயற்சியைத் தமிழக அரசு செய்யவில்லை. இதனால், ஆற்றுப்பாசன விவசாயிகளுக்கு ஏமாற்றத்தை அளித்துள்ளது. குறுவை தொகுப்பு உதவித் திட்டம் ஆழ்குழாய் விவசாயிகளுக்கு மட்டுமே

பயன்படும். இது, வரவேற்கத்தக்கது என்றாலும், அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும். தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்க மாவட்டத் துணைத் தலைவர் வெ. ஜீவகுமார்: காவிரி டெல்டாவில் பிரதானமானது ஆற்றுப்பாசனம்தான். எனவே, தொகுப்பு உதவித் திட்டம் ஆழ்குழாய் விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படும். குறிப்பாக, ஆளுங்கட்சியைச் சேர்ந்த விவசாயிகளுக்கு மட்டுமே பயன்படுகிறது. இதுபோன்ற தருணத்தில் விவசாயத் தொழிலாளர்களுக்கு வாழ்வா, சாவா என்ற பிரச்னை உருவாகிறது. எனவே, விளிம்பு நிலைக்குத் தள்ளப்படும் விவசாயத் தொழிலாளர்களுக்கும் நிவாரணத் திட்டத்தைத் அரசு அறிவிக்க வேண்டும்.

**அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி**

கிருஷ்ணகிரியில் 23-ஆவது அகில இந்திய மாங்கனிக் கண்காட்சி வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. கிருஷ்ணகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மைதானத்தில் வெள்ளிக்கிழமை மாலையில் நடைபெறும் தொடக்க விழாவில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வரவேற்கிறார். உயர்கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் தலைமை வகித்துப் பேசுகிறார். வீட்டு வசதி, நகர்ப்புற மேம்பாடு, வேளாண் துறை அமைச்சர் ஆர்.வைத்திலிங்கம் கண்காட்சியைத் தொடக்கிவைத்து அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கிப் பேசுகிறார். வேளாண் உற்பத்தி ஆணையர், வேளாண் துறை அரசுச் செயலர் ராஜேஷ் லக்கானி முன்னிலை வகிக்கிறார். வேளாண் துறை இயக்குநர் மு.ராஜேந்திரன், தோட்டக்கலை, மலைப் பயிர்கள் துறை இயக்குநர் எல்.சித்திரசேனன், கே.அசோக்குமார் எம்.பி., எம்.எல்.ஏ.-க்கள் கே.பி.முனுசாமி, கே.இ.கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம் நாகராஜ், கே.கோபிநாத், டி.செங்குட்டுவன், டி.ராமச்சந்திரன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் அர்ச்சுனன், நகர்மன்றத் தலைவர் தங்கமுத்து உள்ளிட்டோர் பங்கேற்க

உள்ளனர். தொடர்ந்து, தமிழக சுற்றுலாத் துறை, தென்னக கலைப் பண்பாட்டு மையம், மண்டல கலைப் பண்பாட்டுத் துறை, மத்திய அரசு இசை நாடகப் பிரிவு சார்பில், பல்வேறு மாநிலங்களின் கிராமிய நடன நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. கண்காட்சியில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 50 அரங்குகள் உள்பட 130 அரங்குகள் அமைக்கப்படுகிறது. இந்தக் கண்காட்சி வரும் ஜூன் 28-ஆம் தேதி நிறைவு பெறுகிறது. ஆட்சியர் ஆய்வு

கிருஷ்ணகிரியில் வெள்ளிக்கிழமை தொடங்க உள்ள மாங்கனிக் கண்காட்சி அரங்குகள், மேடை அமைக்கும் பணி, பொழுதுபோக்கு சாதனங்கள் குறித்து மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வியாழக்கிழமை ஆய்வு செய்தார். மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிரமணியன், வேளாண் துறை இணை இயக்குநர் சபாநடேசன், நகராட்சி ஆணையர் முருகன் உள்ளிட்ட பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**முதல்போக பாசனத்துக்காக சிற்றாறு அணை திறப்பு**

குமரி மாவட்டத்தில் முதல்போக பாசனத்துக்காக சிற்றாறு அணைகளிலிருந்து வியாழக்கிழமை விநாடிக்கு 100 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் முதல் போகமான கன்னிப்பூ சாகுபடிக்காக பேச்சிப்பாறை அணை கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

அந்த அணையிலிருந்து இப்போது விநாடிக்கு 216 கனஅடி தண்ணீர் பாசனத்துக்காக வெளியேறிக் கொண்டிருக்கிறது. மாவட்டத்தில் பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டுள்ள நிலையில், நடவுப் பணிகள் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து சிற்றாறு அணைகள் வியாழக்கிழமை திறக்கப்பட்டன.

இந்த அணைகளிலிருந்து விநாடிக்கு 100 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் பாண்டியல் கால்வாய் வழியாக தோவாளை கால்வாயில் செல்லும். இந்நிலையில் பெருஞ்சாணி அணையும் ஓரிரு நாள்களில் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொடர்ந்து தண்ணீர் விட திட்டம்: இம்மாவட்டத்தில் கோடை மழை பரவலாக பெய்துள்ள நிலையில், தற்போது பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 72 அடியைக் கடந்தும், சிற்றாறு அணைகளில் நீர்மட்டம் 17 அடியைக் கடந்தும் வெள்ளஅபாய அளவுகளில் உள்ளன. அதேவேளையில், பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 41 அடிக்கு உள்ளாகவே உள்ளது. இந்நிலையில் மழை தொடர்ந்தால் பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகள் வேகமாக நிரம்பி அவற்றிலிருந்து உபரிநீரை வெளியேற்ற வேண்டிய நிலை ஏற்படும். இதனால் பேச்சிப்பாறை அணையை மூடிவிட்டு பெருஞ்சாணி மற்றும் சிற்றாறு அணைகளிலிருந்து மட்டுமே தண்ணீரை தொடர்ந்து திறந்துவிட பொதுப்பணித் துறை முடிவு செய்துள்ளதாகவும், விவசாயிகள் தரப்பிலும் இதையே எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது. கடைமடை வரை தண்ணீர் செல்லுமா? நிகழாண்டில் அணைகள் திறப்பதற்கு முன்பாக கால்வாய்களில் தூர்வாரப்படாததால் கடைமடை பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் செல்லாது என விவசாயப் பிரதிநிதிகள் தொடர்ந்து கூறி வருகின்றனர். எனினும், அணைகளில் தண்ணீர் அதிக அளவில் உள்ளதால் தண்ணீரின் அழுத்தம் காரணமாக கடைமடைப் பகுதிகள் வரை குறைந்த அளவேனும் தண்ணீர் செல்லும் என பொதுப்பணித் துறையினர் தெரிவித்துள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வெங்காயம்,உருளைக்கிழங்கு இருப்பில் வைக்க முடிவு

புதுடில்லி: வரும் ஜூலை மாதத்தில் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவற்றின் தேவை அதிகரிப்பை முன்னிட்டு, மேற்கண்டவைகளை இருப்பு வைக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக, வேளாண் துறை அமைச்சர் ராதாமோகன்சிங் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: இந்தாண்டு பருவமழை எதிர்பார்த்த அளவை காட்டிலும் குறைவாக பெய்யும் என்ற தகவலாலும், வடமாநிலங்களில் வரும் ஜூலை மாதத்திற்கு பின்னர் தொடர்ந்து பண்டிகை காலம் வருகிறது.அப்போது வெங்காயம், உருளைக்கிழங்கின் தேவை அதிகரித்து காணப்படும். இதனை முன்னிட்டு 24 மாநிலங்களை சேர்ந்த உணவுத்துறை அமைச்சர்களுடன் ஆலோசனை கூட்டம் நடத்தப்படும். விலையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும், இருப்பில் வைத்து கொள்வது, பற்றாக்குறையை ஈடுகட்டுவது போன்றவற்றிற்காக ரூ.500 கோடியில் தனித்திட்டம் வகுக்கப்படும் என கூறினார்.

## மரம் நடும் திட்டத்தை துவக்குகிறார் மோடி

புதுடில்லி : உலக சுற்றுசூழல் தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் மரக்கன்றுகள் நடும் திட்டத்தை பிரதமர் மோடி இன்று துவங்கி வைக்க உள்ளார். பிரதமர் இல்லத்தில் மரக்கன்றை நட்டு, அவர் இத்திட்டத்தை துவக்கி வைக்க உள்ளார்.

## பயமுறுத்துகிறது பருவமழை...வங்கிகள் போக்கு சீராகுமா?

நடப்பாண்டில் பருவமழை, சராசரியை விட சற்று குறைவாக மட்டுமே இருக்கும். அதனால், சில பகுதிகளில், வறட்சி வரலாம் என்ற இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்த கருத்து, அச்சப்பட வைக்கிறது.ரிசர்வ் வங்கி கவர்னர் ரகுராம் ராஜன், கடன் மீதான வட்டிக் குறைப்பை இந்த நேரத்தில் அறிவித்து, பணவீக்கம் அதிகரிக்காமல் இருக்க, கண்காணிப்பு இருக்கும் என்பது அர்த்தமுள்ளது.

மத்திய நிதியமைச்சகத்துடன் கைகோர்த்து, ரிசர்வ் வங்கி செயல்படுகிறது என்பதை, வட்டிவிகித குறைப்பு அறிவிப்புகள் காட்டுகின்றன. இதுவரை மொத்தம், மூன்று முறைகளில், 75 புள்ளிகள் குறைத்த செயல், மிகவும் கவனத்துடன் கையாளப்பட்டதாகும்.

வங்கிகள், தங்களது பாலன்ஸ்ஷீட்டை சீராக்க வேண்டும். வராக்கடன் இழப்பு, சுமையாகாமல் கவனிக்க வேண்டும் என்றும், ரிசர்வ் வங்கி கூறியிருக்கிறது. அதேசமயம், வீடு, கார், மற்ற வங்கிக் கடன் வசதிகளில், ரிசர்வ் வங்கி அறிவித்த வட்டி குறைப்பு முடிவுகள், நுகர்வோருக்கு செல்ல வேண்டும் என்பது கண்டிப்பாக தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வட்டிவிகிதக் குறைப்பை, வங்கிகள், நுகர்வோருக்கு தர முன்வராவிட்டால், தொழில்துறைக்கு தேவைப்படும் நிதி வசதிகளில், தடங்கல் ஏற்படும். அதற்கு வங்கிகள் காரணமாக இருக்கக் கூடாது என்பது, தொடர்ந்து வலியுறுத்தப்படுவது சிறப்பாகும். அது மட்டும் அல்ல, வங்கிகளில் சேமிக்கப்படும் டிபாசிட்டுகள் மீதான வட்டிவிகிதம், குறைக்கப்பட்டிருக்கிறது. இதனால் கிடைக்கும் நிதி ஆதாரத்தையும் கொண்டு கடன் உதவி தருவதில், வங்கிகள் தாராளம் காட்டலாம்.

## திண்டுக்கல்லில் கத்தரிக்காய் கிலோ ரூ.60

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் வரத்து குறைந்து, தேவை அதிகரித்ததால் கத்தரிக்காய் கிலோ ரூ.60 க்கு விற்கப்பட்டது.திண்டுக்கல் மாவட்டம் ரெட்டியார்சத்திரம், முத்தனம்பட்டி, குமாரபாளையம், பொன்மான்துறை, கன்னிமானுாத்து பகுதிகளில் அதிகளவில் கத்தரிக்காய் சாகுபடியாகிறது. இங்கு விளையும் காய்கள் திண்டுக்கல் உழவர் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன.தினமும் ஆயிரம் கிலோ வரை விற்பனை வரும். தற்போது வரத்து குறைந்து 300 கிலோவே விற்பனைக்கு வருகிறது.சுபநிகழ்ச்சிகள், கோயில் திருவிழாக்களால் கத்தரிக்காய் தேவை அதிகரித்துள்ளது. இதனால் இரு வாரங்களுக்கு முன், ரூ.10 க்கு விற்கப்பட்ட கத்தரிக்காய் ரூ.60 ஆக உயர்ந்துள்ளது. இதேபோல் மாவட்டம் முழுவதும் கத்திரிக்காய் விலை உயர்ந்துள்ளது.வியாபாரி ஒருவர் கூறுகையில், “கோடை மழை, பூச்சித் தாக்குதலால் விளைச்சல் பாதிக்கப்பட்டு, வரத்து குறைந்துள்ளது. இதனால் விலை அதிகரித்துள்ளது. தற்போது விலை குறைய வாய்ப்பில்லை,” என்றார்.

## தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு

சென்னை: தமிழகம் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இது குறித்துஅவை கூறியிருப்பதாவது: லட்சத்தீவு பகுதியில் உருவாகியுள்ள காற்றழுத்த தாழ்வு நிலை தொடர்ந்து அதே இடத்தில் நீடித்து வருகிறது. இதனால் தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி மாநிலங்களில் இன்று மழை பெய்ய வாய்ப்பு உள்ளது. முன்னதாக கடந்த 24 மணி நேரத்தில் மதுரை மாவட்டம் மேட்டுப்பட்டியில் 70 மி.மீ , தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலை , கரூர் மாவட்டம் பஞ்சப்பட்டியில் தலா 50 மி.மீட்டர் பதிவாகியுள்ளது.

மேலும் குமரி மாவட்டம் தக்கலை , குளித்துறை ஆகியபகுதிகளில் தலா 40 மி.மீ அளவிற்கு பதிவாகியுள்ளதாக தெரிவித்துள்ளது.

## தேயிலை தோட்டங்களில் புதிய கட்டடங்கள் வகுக்க வேண்டும் புதிய வரைமுறை

மஞ்சூர்: கட்டட காடுகளாக மாறிவரும் தேயிலை தோட்டங்களால், விவசாய தொழிலாளர்கள் பாதிக்கும் அபாயம் உருவாகி வருகிறது.

மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில் தேயிலை விவசாயம், பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தேயிலை தொழில் சில ஆண்டுகளாக நலிவடைந்து வருவதால், தேயிலை விவசாயிகள் கிடைக்கும் விலைக்கு, தேயிலை தோட்டங்களை விற்று வருகின்றனர்.

இதனை வாங்கும் புதிய உரிமையாளர்கள், தேயிலை தோட்டங்களை அழித்து, ஆடம்பர பங்களா, ரிசார்ட்டுகளை கட்டி வருகின்றனர். நஞ்சை நிலங்களாக வரையறை செய்யப்படாததால் யார் வேண்டுமானாலும், வாங்கலாம், விற்கலாம் என்ற நிலை உள்ளது.

இதனால் தேயிலை தோட்டங்களை, நஞ்சை நிலங்களாக வரையறை செய்யும் வகையில், சட்டத்திருத்தம் கொண்டு வந்தால், தேயிலை தோட்டங்கள் அழிக்கப்படுவதை தவிர்க்கலாம் என, சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**விதிமுறை தேவை:**

சுற்றுச்சூழல் ஆர்வலர் பெள்ளியப்பன் கூறுகையில், "மஞ்சூர் சுற்றுவட்டார பகுதிகளில், 300 ஏக்கர் தேயிலை தோட்டம் அழிக்கப்பட்டு, கட்டடங்களாக மாற்றப்பட்டுள்ளது. 'தேயிலை தோட்டங்களை வீட்டு மனைகளாக மாற்ற, தேயிலை வாரியத்தின் அனுமதியை பெற வேண்டும்' என்ற விதிமுறையை அமுல்படுத்தினாலும், புதிய கட்டடங்களின்

எண்ணிக்கையை குறைக்க முடியும். இதற்கு மாவட்ட நிர்வாகத்தின் ஒத்துழைப்பு முக்கியம்," என்றார்.

ஆர்.டி.ஓ., பழனிகுமார் கூறுகையில், "தேயிலை தோட்டம் அழிக்கப்பட்டு, விதிமுறை மீறி கட்டப்பட்டு வரும் கட்டடங்கள் குறித்து புகார் வந்தால், பாரபட்சம் காட்டாமல் நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

### ரேஷனில் சிறு தானியம் அவசியம்

ஊட்டி: 'ரேஷன் கடைகளில், பாரம்பரிய சிறு தானிய பொருட்களை வினியோகிக்க வேண்டும்' என, தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாசார சேவை அறக்கட்டளை (நெஸ்ட்) சார்பில், ஊட்டி சி.எஸ்.ஐ.,-சி.எம்.எம்., பள்ளியில், உலக சுற்றுச்சூழல் தின நிகழ்ச்சி நடத்தப்பட்டது. ஆசிரியை ஹேன்னா ரூத் வரவேற்றார். உதவி தலைமையாசிரியை வளர்மதி வினோதா, தலைமை வகித்தார். மாணவ, மாணவியர் சார்பில் சுற்றுச்சூழல் காப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது.

பின்பு, 'நெஸ்ட்' அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் சிவதாஸ் பேசியதாவது: ஓரின சாகுபடி அதிகரித்து வருவதால், ராகி, கோதுமை, தினை உட்பட சிறு தானிய பொருட்களின் விளைச்சல் மறைந்து விட்டது. கம்பு, ராகி, சோளம் உட்பட சிறு தானியங்களை தினசரி உணவில் சேர்த்து கொள்வதன் மூலம், பல நோய்கள் தடுக்கப்படுகிறது. சிறு தானிய பயன்பாடு மூலம், உடல் ஆரோக்கியம் மேம்படுவதுடன், பல்லுயிர் பெருக்கம் பாதுகாக்கப்படுகிறது. ரேஷன் கடைகளில் கம்பு, சோளம், தினை, கேழ்வரகு உட்பட சிறு தானியங்களை வினியோகிக்கும் திட்டத்தை மத்திய அரசு கொண்டு வந்தால், மக்கள் கட்டாயம் அவற்றை வாங்கிப் பயன்படுத்துவர்; அதன் மூலம் உற்பத்தி அதிகரிக்கும்.

இக்கோரிக்கையை பள்ளி, கல்லுாரி மாணவ, மாணவியர், மத்திய, மாநில அரசுகளின் கவனத்துக்கு, ஒரு இயக்கமாக கொண்டு செல்ல வேண்டும். இவ்வாறு, சிவதாஸ் பேசினார். நிகழ்ச்சியில், சிறு தானியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன.

**திராட்சை நடவில் விவசாயிகள் ஆர்வம்: 30 ஆயிரம் வேர் குச்சிகள் விற்பனை**

ராயப்பன்பட்டி:ஆனைமலையன்பட்டி திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் இதுவரை 30 ஆயிரம் வேர் குச்சிகள் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்பட்டுள்ளது. ஒரு லட்சம் குச்சி கள் இந்த ஆண்டு இலக்காக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக திராட்சை ஆராய்ச்சி நிலையத்தினர் முடிவு செய்துள்ளனர்.திராட்சை சாகுபடியில் செவட்டை நோய் தாக்குதல் விவசாயிக ளுக்கு பிரச்னையாக உள்ளது. திராட்சை விவசாயிகளுக்கு உதவுவதற்காக ராயப்பன்பட்டி சண்முகாநதி அணை அருகில் திராட்சை ஆராய்ச்சி நிலையம் துவங்கப்பட்டுள்ளது. இங் குள்ள பேராசிரியர்கள் நோய் தாக்காத, அதிக மகசூல் தரக்கூடிய ரகத்தை புனேயில் உள்ள தேசிய திராட்சை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து வாங்கி வந்துள்ளனர். முதற்கட்டமாக 30 ஆயிரம் திராட்சை வேர் குச்சிகள் ஆராய்ச்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஒரு குச்சியின் விலை ரூ. 7. ஒரு ஏக்கருக்கு 800 முதல் ஆயிரம் குச்சிகள் வரை தேவைப்படும். இந்த ரகம் வீரியமுள்ள கொடிகளை உருவாக்கும். 25 சதவீத மகசூல் கூடுதலாக கிடைக்கும். வறட்சியை தாங்கி வளரக்கூடியது. பேராசிரியர் பார்த்திபன் கூறிய தாவது: 30 ஆயிரம் வேர்குச்சிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. மேலும் 70 ஆயிரம் குச்சிகள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயித்துள்ளோம். ஆண்டிற்கு ஒரு லட்சம் குச்சிகள் விற்கப்படும். திராட்சை சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் திராட்சை சாகுபடியில் புரட்சியை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளோம், என்றார்.

**காட்டுமன்னார்கோவில் பகுதியில் குறுவை சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரம்**



காட்டுமன்னார்கோவில் பகுதியில் குறுவை சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

நிலத்தடி நீர்மட்டம்

காட்டுமன்னார்கோவில் பகுதியில் ஆண்டுதோறும் ஜூன் மாதத்தில் குறுவை நெல் சாகுபடி செய்வது வழக்கம். அதன்படி இந்த ஆண்டில் காட்டுமன்னார்கோவில், ஆயங்குடி, குமராட்சி, எள்ளேரி, எடையார் உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் மிகுந்த ஆர்வத்துடன் அதிக நிலப்பரப்பில் சம்பா நெல் நடவு செய்யும் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறுகையில், விவசாயிகளான நாங்கள் அனைவரும் தற்போது மின்மோட்டார் பாசன

உதவியுடன் நடவு பணிகளை மேற்கொண்டு வருகிறோம்.காட்டுமன்னார் கோவில் பகுதியில் கோடை மழையானது ஒரளவுக்கு பெய்த காரணத்தால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளது. இதனால் எங்களின் பயிர்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது . எனினும் நெல் சாகுபடி செலவானது அதிகரித்துள்ளதால், தமிழக அரசு கடந்த ஆண்டை போல், இந்த ஆண்டும் விவசாயிகளுக்காக குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அதன் மூலம் எங்களுக்கு பூச்சி மருந்து, உரம் உள்ளிட்ட இடுபொருட்களை வழங்க வேண்டும். அப்படி செய்தால் தான் நெற்பயிர்களை எங்களால் நன்கு பராமரித்து வளர்க்க முடியும். அதன் மூலம் நல்ல வருமானம் கிடைக்கும் சூழ்நிலை உருவாகும். இவ்வாறு அவர் கூறினார்.

**திண்டுக்கல்லில் ஒரு மணிநேரம் பலத்த மழை மாவட்டம் முழுவதும் 6 மாதத்தில் 141 மி.மீட்டர் கூடுதலாக மழை பதிவு**



திண்டுக்கல்லில் நேற்று மதியம் ஒரு மணிநேரம் பலத்த மழை பெய்தது. கடந்த 6 மாதத்தில் மாவட்டம் முழுவதும் 141 மி.மீட்டர் அதிகம் மழை பதிவாகி உள்ளது. கொட்டி தீர்த்த மழை : திண்டுக்கல் நகரில் கடந்த சில

நாட்களாகவே வெயிலின் தாக்கம் சற்று அதிகமாக இருந்தது. இந்த நிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு 12½ மணிமுதல் ஒரு மணிநேரம் மழை பெய்தது. மேலும் நேற்று காலையில் இருந்தே வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. அதன்பின்னர் மதியம் 1.45 மணி முதல் 2.45 மணி வரை பலத்த மழை கொட்டி தீர்த்தது. இதனால் நகரின் முக்கிய சாலைகள், தெருக்களில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. குறிப்பாக திண்டுக்கல் நாகல்நகர் ஆர்.எஸ்.ரோடு, பழைய ஆர்.எம்.எஸ். ரோடு ஆகிய இடங்களில் சுமார் 2 அடிக்கு மேலாக தண்ணீர் தேங்கி நின்றது. அந்த தண்ணீரை பீய்ச்சி அடித்தபடி வாகனங்கள் சென்றன. மோட்டார் சைக்கிளில் சென்ற சிலர் தடுமாறி கீழே விழுந்த சம்பவமும் அரங்கேறியது.

சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது

திண்டுக்கல்லில் பெய்த பலத்த மழையினால், தாழ்வான பகுதிகளில் உள்ள சில வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. மேலும் திண்டுக்கல் நகர மக்களின் பொழுது போக்கு அம்சமாக திகழும் குமரன் பூங்காவின் சுற்றுச்சுவர் சுமார் 50 அடி நீளத்துக்கு இடிந்து விழுந்தது. திண்டுக்கல் நகரில் உள்ள பெரும்பாலான சாக்கடை கால்வாய்கள் தூர்வாரப்படவில்லை. ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு மழைநீரோடு, கழிவுநீர் கலந்து சாலைகளில் ஓடியது. இதன் காரணமாக திண்டுக்கல்லில் சுகாதாரக்கேடு அபாயம் ஏற்பட்டுள்ளது. இதேபோல் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்று பலத்த மழை பெய்தது. 141 மி.மீட்டர் மழை அதிகம் கடந்த 50 ஆண்டு கால சராசரி மழை அளவை ஒப்பிடும்போது, இந்த ஆண்டில் திண்டுக்கல் மாவட்டத்துக்கு வருண பகவான் கருணை காட்டி இருக்கிறார் என்றே சொல்லலாம். ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரை, திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 199.8 மி.மீட்டர் மழை பெய்ய வேண்டும் என்று இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால் மே மாதம் முடிய 340.45 மி.மீட்டர் மழை பெய்துள்ளது. சராசரியை விட கூடுதலாக 141.37 மி.மீட்டர் மழை பதிவாகி இருக்கிறது. ஜனவரி மாதத்தில் 33.09 மி.மீட்டர் மழை பெய்ய வேண்டும். ஆனால் 34.78 மி.மீட்டர் மழை பெய்தது. பிப்ரவரி மாதத்தில் மட்டும் 10.8 மி.மீட்டர் மழை பெய்வதற்கு பதிலாக 0.08 மி.மீட்டர் மழை பெய்து ஏமாற்றி விட்டது. விவசாயிகள் மகிழ்ச்சி :

மார்ச் மாதத்தில் பெய்ய வேண்டிய 15.7 மி.மீட்டர் மழைக்கு பதிலாக 19.89 மி.மீட்டர் மழையும், ஏப்ரலில் பெய்ய வேண்டிய 61 மி.மீட்டர் மழைக்கு பதிலாக 132 மி.மீட்டர் மழையும், மே மாதத்தில் 78.4 மி.மீட்டர் மழை பெய்வதற்கு பதிலாக 153.7 மி.மீட்டர் மழையும் பெய்திருக்கிறது.

மே மாதம் முழுவதும் 78.4 மி.மீட்டர் மழை பெய்ய வேண்டும். ஆனால் அதிகபட்சமாக 153.7 மி.மீட்டர் மழை பெய்தது. சராசரி மழையை விட கூடுதல் மழை பெய்திருப்பதால் திண்டுக்கல் மாவட்ட பொதுமக்கள், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரேநாளில் 138 மி.மீட்டர் மழை பதிவு இதற்கிடையே நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்) விவரம் வருமாறு:- திண்டுக்கல்-16.94, நிலக்கோட்டை-12.04, நத்தம்-10, பழனி-12, சத்திரப்பட்டி-10, வேடசந்தூர்-76.09 என மொத்தம் 138.24 மி.மீட்டர் மழை ஒரே நாளில் பதிவாகி இருக்கிறது.

**ஒட்டன்சத்திரம் பரப்பலாறு அணை திறப்பு திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் 2,323 ஏக்கர் பாசன வசதி பெறும்**



சத்திரப்பட்டி,

ஒட்டன்சத்திரம் பரப்பலாறு அணை திறக்கப்பட்டது. இதன் மூலம் திண்டுக்கல், கரூர் மாவட்டங்களில் 2 ஆயிரத்து 323 ஏக்கர் பாசன வசதி பெறும்.

அணை திறப்பு

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே உள்ள வடகாடு மேற்கு தொடர்ச்சி மலையில் பரப்பலாறு அணை அமைந்துள்ளது. இந்த அணையில் தற்போது 82.46 அடி தண்ணீர் உள்ளது. முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் இந்த அணையை நேற்று ஒட்டன்சத்திரம் ஒன்றியக்குழு தலைவர் கே.பி.நல்லசாமி மலர் தூவி திறந்து வைத்தார். வருகிற 14-ந்தேதி வரை இந்த அணை திறக்கப்படும். 35 கனஅடி வீதம் 2 நாட்களுக்கு விருப்பாச்சி பெருமாள் குளத்துக்கும், 25 கன அடிவீதம் 2 நாட்களுக்கு தாசரிபட்டி முத்துபூபால சமுத்திர

குளத்துக்கும், 110 கனஅடி வீதம் 2 நாட்களுக்கு தங்கச்சியம்மாபட்டி சடைய குளத்துக்கும், 90 கனஅடி வீதம் ஒரு நாள் ஓடைப்பட்டி செங்குளத்துக்கும், 50 கனஅடி வீதம் ஒரு நாள் வெரியப்பூர் ராமசமுத்திரம் குளத்துக்கும், 90 கனஅடி வீதம் 2 நாட்களுக்கு ஜவ்வாதுபட்டி பெரிய குளத்துக் கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

2,323 ஏக்கர் பாசன வசதி

இந்த அணையின் மூலம் திண்டுக்கல், கரூர் மாவட்டங்களை சேர்ந்த 2 ஆயிரத்து 323 ஏக்கர் பாசன வசதி பெறும். பரப்பலாறு அணையின் மூலம் ஒட்டன்சத்திரத்தில் உள்ள 6 குளங்கள் குடிநீர் ஆதாரமாகவும், பாசன வசதிக்காகவும் பயன்பட்டு வருகிறது.

அணை திறப்பின்போது பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் தமிழ்செல்வன், உதவி பொறியாளர் நாகராஜன், விருப்பாட்சி ஊராட்சி மன்ற தலைவர் சந்திரன், ஒன்றிய அ.தி.மு.க. அவைத் தலைவர் ராமலிங்கம், வடகாடு ஊராட்சி மன்ற துணைத்தலைவர் விமலா பாலகிருஷ்ணன், வடகாடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் வீராச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**நாகர்கோவிலில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் "மேகி நூடுல்ஸ்'' மாதிரிகள் சேகரிப்பு சோதனை செய்ய நெல்லைக்கு அனுப்பி வைக்கப்பட்டது**



நாகர்கோவிலில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் நூடுல்ஸ் மாதிரிகளை சேகரித்து, சோதனை செய்வதற்காக நெல்லைக்கு அனுப்பி வைத்தனர்.

<u>ஆணையர் உத்தரவு</u>

இந்தியாவில் "மேகி நூடுல்ஸ்'' பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. எனவே தமிழகத்தில் "மேகி நூடுல்ஸ்''சுக்கு தடை வருமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்தநிலையில் தமிழகத்தில் விற்பனை செய்யப்படும் "மேகி நூடுல்ஸ்''களின் மாதிரிகளை சேகரித்து அரசு உணவுப்பொருள் சோதனைக்கூடங்களுக்கு அனுப்பி, அறிக்கை பெற்று அதன் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்வது என தமிழக அரசு முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இந்தநிலையில், தமிழக உணவு பாதுகாப்பு ஆணையர், அனைத்து மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் ஒரு கடிதம் அனுப்பி உள்ளார். அதில் மேகி நூடுல்ஸ் மாதிரிகளை சேகரிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

<u>மாதிரிகள் சேகரிப்பு</u>

இதையடுத்து குமரி மாவட்ட உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி சாலோ டீசன் குமரிமாவட்டத்தில் உள்ள 9 ஒன்றியங்கள் மற்றும் 4 நகராட்சிப் பகுதிகளிலும் மேகி நூடுல்ஸ் மாதிரிகளை சேகரிக்க அந்தந்த வட்டார, நகர உணவு பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். அதன்படி நேற்று மாவட்டம் முழுவதும் மேகி நூடுல்ஸ் சேகரிக்கும் பணிகள் தொடங்கியது.

நாகர்கோவில் அப்டா மார்க்கெட் பகுதியில் உள்ள ஒரு கடையில் உணவு பாதுகாப்பு நியமன அதிகாரி சாலோடீசன் தலைமையில் நாகர்கோவில் நகராட்சி உணவு பாதுகாப்பு அதிகாரி சங்கரநாராயணன், அகஸ்தீஸ்வரம் வட்டார உணவு பாதுகாப்பு அதிகாரி பிரவீன்ரகு ஆகியோர் மேகி நூடுல்ஸ் மாதிரிகளை சேகரித்தனர்.

<u>சோதனைக்கு அனுப்பி வைப்பு</u>

பின்னர் அந்த மாதிரிகள் நெல்லை பாளையங்கோட்டையில் உள்ள அரசு உணவுப்பொருள் சோதனைக்கூடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேலும் அப் பகுதியில் உள்ள ஒரு கடையில் அரசால் தடை செய்யப்பட்ட பான்பராக் உள்ளிட்ட போதை பாக்குவகைகள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டு, அந்த கடையில் இருந்து 4 கிலோ எடையுள்ள போதை பாக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. இந்த பாக்குகளின் மொத்த மதிப்பு ரூ.2 ஆயிரம் ஆகும்.

**மதுரையில் இடி–மின்னலுடன் 3–வது நாளாக மழை அலங்காநல்லூர் பகுதியில் ஆலங்கட்டி மழை**



மதுரையில் இடி–மின்னலுடன் நேற்று 3–வது நாளாக மழை பெய்தது.

<u>கோடை மழை</u>

கோடை காலமான ஏப்ரல், மே மாதங்களில் மதுரையில் வெயில் வாட்டி எடுக்கும். ஆனால் இந்த ஆண்டு வழக்கத்திற்கு மாறாக இந்த மாதங்களில் நல்ல மழை பெய்தது. ஏப்ரல் மாதத்தில் சராசரியாக 148 மில்லி மீட்டர் மழை பதிவானது. அதில் அதிகபட்சமாக கள்ளிக்குடியில் 224 மில்லி

மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக விரகனூரில் 59 மி.மீட்டர் மழையும் பதிவானது

அதே போல் மே மாதத்தில் சராசரியாக 121 மில்லி மீட்டர் மழை பதிவானது. அதிகபட்சமாக திருமங்கலத்தில் 242 மி.மீட்டரும், குறைந்தபட்சமாக இடையபட்டியில் 20 மில்லி மீட்டர் மழையும் பதிவானது.

இந்த கோடை மழையால் வைகை அணையிலும், நிலத்தடி நீர் மட்டமும் நன்றாக இருந்தது. இதனால் மதுரை நகர மக்கள் குடிநீர் பிரச்சினையில் இருந்து தப்பித்துக் கொண்டனர்.

<u>தென்மேற்கு பருவமழை</u>

தற்போது தினமும் மதுரையில் மழை பெய்தபடி உள்ளது. காலையில் வெயில், மாலையில் மழை என்ற பருவ நிலை உள்ளது. பொதுவாக ஜூன் மாத தொடக்கத்தில் கேரளாவில் தென்மேற்கு பருவ மழை தொடங்கும். அதன் எதிரொலியாக மதுரையில் வெப்பம் தணிந்து குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை இருக்கும். ஆனால் இன்னும் கேரளாவில் பருவ மழை தொடங்காத சூழ்நிலையில் மதுரையில் மழை பெய்வது அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி உள்ளது.

நேற்று மாலை மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் நல்ல மழை பெய்தது. சுமார் 1 மணி நேரம் இடி–மின்னலுடன் பெய்த மழையால் சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இது 3–வது நாளாக பெய்த மழை என்பது குறிப்பிடத்தக்கது.

அலங்காநல்லூர் அருகே பாறைப்பட்டியில் சுமார் 10 நிமிடம் ஆலங்கட்டி மழை பெய்தது.

<u>மேட்டுப்பட்டி...</u>

கடந்த 1–ந் தேதி முதல் 4–ந் தேதி (நேற்று) வரை மட்டும் மதுரை மாவட்டத்தில் சராசரியாக 24 மில்லி மீட்டர் மழை பெய்து உள்ளது. அதிகபட்சமாக நேற்று (4–ந் தேதி) மேட்டுப்பட்டியில் 65 மி.மீட்டரும், சிட்டம்பட்டியில் 47 மி.மீட்டர் மழையும் பதிவாகி உள்ளது. மதுரை

நகரை பொறுத்தவரை 3–ந் தேதி தல்லாகுளத்தில் 50 மில்லி மீட்டர் மழை பெய்துள்ளது.

**குன்னூர் பகுதியில் கடந்த 5 மாதங்களில் 100 செ.மீ. மழை பதிவு தேயிலை மகசூல் அதிகரிப்பு**



குன்னூர் பகுதியில் கடந்த 5 மாதங்களில் 100 செ.மீ. மழை பதிவாகி உள்ளதால், தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதாக உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய மண்டல உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு தெரிவித்துள்ளார்.

பருவ மழை

இந்தியாவில் இந்த ஆண்டு 5 சதவீதம் பருவ மழை குறைவடைய வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இதனால் உணவு தானியங்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் நிலை உள்ளது. எனவே இதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்த நிலையில் நீலகிரி மாவட்டத்தில் இதன் தாக்கம் எதிரொலிக்குமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. இது குறித்து உபாசி தேயிலை ஆராய்ச்சி மைய மண்டல உதவி இயக்குனர் டாக்டர் உதயபானு கூறியதாவது:- பருவமழை குறைவின் தாக்கம் நீலகிரியில் எதிரொலிக்க வாய்ப்பு கிடையாது. இந்த ஆண்டு மாவட்டத்தில் அதிகளவு மழை பெய்துள்ளது. குறிப்பாக குன்னூர் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் முதல் கடந்த 2-ந் தேதி வரை 100 செ.மீ., மழை பதிவாகி உள்ளது. இதே கால கட்டத்தில்

கடந்த ஆண்டு 55 செ.மீ. மழையே பெய்துள்ளது. கடந்த 5 மாதங்களில் 45 செ.மீ. மழை அதிகளவு பெய்துள்ளது. இதன் காரணமாக தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. குன்னூர் பகுதியில் ஆண்டு சராசரி மழை 150 செ.மீ. முதல் 175 செ.மீ. வரை மழை பெய்யும். ஆனால் இந்த ஆண்டு கடந்த 5 மாதங்களில் 100 செ.மீ. மழை கிடைத்துள்ளது. குன்னூர் பகுதியில் தென்மேற்கு பருவமழை குறைவடைந்தாலும், அக்டோபர், நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவ மழை கைகொடுக்கும். வடகிழக்கு பருவமழை ஏமாற்றாமல் இருக்க வேண்டும்.

சிவப்பு சிலந்தி தாக்குதல்

ஆண்டு தோறும் மே மாதத்தில் தேயிலை செடிகளில் சிவப்பு சிலந்தி தாக்குதல் அதிகமாக காணப்படும். ஆனால் இந்த ஆண்டு மழையின் காரணமாக சிவப்பு சிலந்தி தாக்குதல் மிகவும் குறைந்துள்ளது. விவசாயிகள் பூச்சி மருந்தை பயன்படுத்துவது இல்லை. மேலும் பச்சை தேயிலை மகசூல் அதிகரித்துள்ளதால் விலையும் குறைவடைந்துள்ளது. விலை குறைவினால் சிறு விவசாயிகள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயம் அல்லாத தொழிலுக்கு, யூரியா பயன்படுத்தப்படுவதை தடுக்க நடவடிக்கை கலெக்டர் கணேஷ் தகவல்**



விவசாயம் அல்லாத தொழிலுக்கு யூரியா பயன்படுத்தப்படுவதை தடுக்க அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டு உள்ளதாக கலெக்டர் கணேஷ் தெரிவித்தார்.

யூரியா உரம்

புதுக்கோட்டை டான்பெட் நிறுவனத்திற்கு 1,321 மெட்ரிக் டன் கிரிப்கோ யூரியா உரம் சென்னை வேளாண்மை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதைத்தொடர்ந்து இந்த யூரியா உரம் தூத்துக்குடியில் இருந்து ரெயில் மூலம் நேற்று முன்தினம் புதுக்கோட்டை வந்தடைந்தது. இந்த உரத்தை கலெக்டர் கணேஷ் பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர் அவர் கூறியதாவது:-

புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்போது கோடை மழை பெய்து கண்மாய்களில் தண்ணீர் உள்ளது. இது மானாவாரி பயிர் செய்கின்ற விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். கோடையில் சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கும், சம்பாவில் சாகுபடி செய்ய உள்ள பயிர்களுக்கும் சேர்த்து தேவையான யூரியா உரத்தினை அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்க மாவட்ட நிர்வாகம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

விவசாயம் அல்லாத தொழிலுக்கு...

இவ்வாறு வரப்பெற்ற கிரிப்போ யூரியா உரம் ஒவ்வொரு மூட்டையும் 50 கிலோவிற்கு குறைவில்லாமல் எடை உள்ளதா என கிரிப்கோ நிறுவன விற்பனை அலுவலரிடம் கேட்டறிந்து ஆய்வு செய்யப்பட்டது. மேலும் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 62 தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு 1,068 மெட்ரிக் டன் அனுப்பவும், 253 மெட்ரிக் டன் யூரியா டான்பெட் குடோனில் இருப்பு வைக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது.

மேலும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்படும் யூரியா உரம் விவசாயிகளுக்கு வினியோகம் செய்யப்படுவதை வேளாண்மை துறை அலுவலர்கள் கண்காணிக்கவும், விவசாயம் அல்லாத தொழிலுக்கு யூரியா பயன்படுத்தப்படுவதை தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு

உத்தரவிடப்பட்டு உள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆய்வின்போது வேளாண்மை இணை இயக்குனர் (பொறுப்பு) சதானந்தம், வேளாண்மை உதவி இயக்குனர் (தரக்கட்டுப்பாடு) திருப்பதி, டான்பெட் நிறுவன அலுவலர் மற்றும் கிரிப்கோ நிறுவன பிரதிநிதி உடன் இருந்தனர்.

**காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ரூ. 41 கோடியில் தொகுப்பு உதவி ஜெயலலிதாவுக்கு, மூவேந்தர் முன்னணிக்கழக தலைவர் பாராட்டு**




அகில இந்திய மூவேந்தர் முன்னணிக்கழக தலைவர் டாக்டர் சேதுராமன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காவிரி டெல்டா விவசாயிகளுக்கு ரூ. 41 கோடியில் தொகுப்பு உதவியும், மும்முனை மின்சாரமும் வழங்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். இது தமிழகத்தில் 2-ம் பசுமை புரட்சிக்கு ஜெயலலிதா வித்திடும் முயற்சியில் ஒரு மைல்கல். விவசாயிகள் நலனில் அக்கறையின்றி செயல்பட்ட தி.மு.க. அரசின் கவனக்குறைவால் உணவு தானிய உற்பத்தி தமிழகத்தில் 4 ஆண்டுகளுக்கு முன்பு மிகவும்

பின்தங்கிஇருந்தது. 80 டன்கள் உணவு தானிய உற்பத்தியாக இருந்ததை ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பின்பு 120 டன்களாக உயர்த்தி புதிய சாதனை படைத்தது. 4 ஆண்டுகளில் 40 டன்கள் கூடுதலாக உணவு தானிய உற்பத்தி செய்தது புதிய சாதனையாகும். கடந்த 3 ஆண்டுகளில் வழங்கியது போல மும்முனை மின்சாரம், நவீன நடவு எந்திரங்கள், எந்தவித கட்டணமின்றி வழங்குதல், ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 315 உதவித்தொகை, இலவச மண்பரிசோதனை, மண்வளம் மேம்படுத்த இலவச ஜிப்சம், குறுகிய காலபயிர்கள் விவசாயம் செய்ய வழிகாட்டுதல் ஆகிய நவீன முறையில் விவசாயம் செய்ய வழிகாட்டியுள்ளார் ஜெயலலிதா. விவசாயத்திற்கான மண்வள பாதுகாப்புக்கு செயல்படுத்தப்படும் திட்டங்கள் இன்றைக்கு மட்டுமல்ல எதிர்காலத்திலும் பயனளிக்கும் அற்புத காமதேனு திட்டம் என்பதை காலம் உலகிற்கு உணர்த்தும். எனவே காவிரி டெல்டா விவசாயிகளுக்கு தொகுப்பு உதவி, மும்முனை மின்சாரம் வழங்க உத்தரவிட்ட ஜெயலலிதாவுக்கு பாராட்டு தெரிவித்துக்கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

தினகரன்

**வெங்காயம், உருளைக்கிழங்கை இருப்பு வைக்க அரசு தீவிரம்**




புதுடெல்லி: நாடு முழுவதும் பருவமழை இந்த ஆண்டு குறையும் என அறிவிப்பு வெளியாகியுள்ளது. இதையடுத்து, பண்டிகை காலத்தில் விலை உயரும் காய்கறிகளான வெங்காயம், உருளைக்கிழங்கு மற்றும் பருப்பு வகைகளை அதிக அளவு இருப்பு வைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. பிரதமர் மோடியின் அரசுக்கு அடுத்து வரும் ஜூலை முதல் நவம்பர் வரையிலான காலம் மிகவும் சோதனையாக இருக்கும். வடமாநிலங்களில் சமையலுக்கு அதிகமாக பயன்படும் வெங்காயம், உருளைக்கிழங்கு ஆகியவைகள் அடுத்துவரும் பண்டிகை காலங்களில் அதிக தேவை ஏற்படும். ஏற்கெனவே பருவமழை குறைவால் காய்கறிகள் விளைச்சல் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. இதனால், பண்டிகை காலத்தில் காய்கறிகளின் விலை உயர்வை கட்டுக்குள் வைக்க 24 மாநிலங்களில் உள்ள காய்கறி பதுக்கும் வியாபாரிகளை கண்காணிக்க

அரசு உத்தரவிட்டுள்ளது.
அதிலும், குறிப்பாக வெங்காயம், மற்றும் உருளைக்கிழங்கு ஆகியவை ஒவ்வொரு ஆண்டும், ஜூலை மாதத்திற்கு பின்பு, தேவை அதிகரிப்பு காரணமாக விலை உயரும். இதைக் கருத்தில் கொண்டு, இப்போதே அரசு கிட்டங்கிகளில் உருளை கிழங்கு, வெங்காயத்தை இருப்பு வைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், பற்றாக்குறையைக் குறைக்க வெங்காய ஏற்றுமதிக்கான குறைந்தபட்ச விலையையும் உயர்த்த அரசு திட்டமிட்டுள்ளது. இது குறித்து வேளாண் அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் கூறுகையில், நாட்டில் உள்ள அனைத்து முக்கிய காய்கறிச் சந்தைகளில் முக்கிய காய்களின் விலைகள், வரத்து ஆகியவைகளை கண்காணித்து வருகிறோம்.
குறிப்பாக பண்டிகை காலத்தில் வெங்காயம், உருளைக்கிழங்கு தேவை அதிகரிக்கும். இதை சமாளிக்க அரசு இப்போதே நடவடிக்கைகள் எடுக்கத் தொடங்கிவிட்டது. 24 மாநில உணவுத்துறை அமைச்சர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி காய்கறிகளின் விலையை நாடு முழுவதும் கட்டுக்குள் வைக்கவும், போதுமான அளவு இருப்பு வைக்கவும் முடிவு செய்துள்ளோம் என்றார். இந்நிலையில், பருவமழை குறைவால் ஏற்படும் பாதிப்பை சரி செய்ய ரூ.500 கோடி நிதியில் தனித்திட்டம் வகுக்கப்படும் என மத்திய வேளாண்துறை அமைச்சர் ராதாமோகன்சிங் தெரிவித்தார். மேலும், அதிகரிக்கும் பருப்பு விலையைச் சமாளிக்க அனைத்து மாநிலங்களின் பருப்பு தேவை குறித்து தெரிவிக்க கடிதம் எழுதப்பட்டுள்ளது.
அதன் அடிப்படையில் அரசு பருப்பை இறக்குமதி செய்யும். இதில் எந்த சிக்கலும் இல்லை. காய்கறி பதுக்குவோர்களுக்கு இந்த முறை முடிவு கட்டப்படும் என்றார்.
ஸ்கை மெட் கணிப்பு: இந்திய வானிலை ஆய்வு மையம் இந்த ஆண்டு பருவமழை எல்-நினோ காரணிகளில் 88 சதவீதமாகக் குறைய

வாய்ப்புள்ளது எனத் தெரிவித்துள்ளது. ஆனால், தனியார் நிறுவனமான ஸ்கை மெட், பருவமழையில் எவ்விதமான பாதிப்பும் இருக்காது. இம்மாதம் 15-ம்ேததிக்குப் பின்பு, நாட்டின் பாதியளவும், ஜூலை பிற்பகுதியில் நாடு முழுவதும் பருவமழை சிறப்பாக இருக்கும் என்று ெதரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

எதையும் சமாளிப்போம்...

இயல்புக்கும் குறைவாக மழைபொழிவு இந்த ஆண்டு இருக்கும் எனும் அறிவிப்பால் உணவு தானிய உற்பத்தி எந்தவிதத்திலும் பாதிக்காது. வடமேற்கு பகுதிகளில் சிறப்பான மழைபொழிவு இருக்கும். நாட்டில் தெற்கு, மத்திய மற்றும் வடக்கு பகுதிகளிலும் மழை இயல்பை ஒட்டியே இருக்கும். இருந்தாலும், எந்த அசாதாரண நிலையையும் எதிர்கொள்ள மத்திய அரசு போதுமான உணவு தானிய கையிருப்பு வைத்துள்ளது. மழை குறித்த அறிவிப்பு ஒரு ஊகமே, இது சில நேரங்களில் உண்மையாகலாம் அல்லது தவறாகலாம். கடந்த ஆண்டைப் போலவே உணவு மேலாண்மையை அரசு சிறப்பாகக் கையாளும் என்று மத்திய நிதியமைச்சர் அருண் ஜெட்லி தெரிவித்தார்.

**ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் காய்கறி விற்பனை அதிகரிப்பு**

கோவை, : கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தையில் பொதுமக்கள் வருகையும், காய்கறி வரத்தும் கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளதால் விற்பனை அதிகரித்துள்ளது. கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தைக்கு பொதுமக்கள் கடந்த மாதம் சாதாரண நாட்களில் 8 ஆயிரம் பேரும், சனி, ஞாயிறு கிழமைகளில் 10 ஆயிரம் பேரும் வந்துள்ளனர். கடந்த முதல் தேதி முதல் சாதாரண நாட்களில் மக்கள் வருகை 10 ஆயிரமாக உள்ளது. வரும் சனி, ஞாயிறு கிழமைகளில் இதன் எண்ணிக்கை மேலும் 2 ஆயிரம் பேர் அதிகரிக்க வாய்ப்புள்ளது.பொதுமக்கள் வருகை அதிகரித்தது போல் தற்செயலாக காய்கறி வரத்தும் அதிகரித்துள்ளது. கடந்த மாதம் தினசரி சராசரியாக 150 விவசாயிகள் வந்தனர். தற்போது 160 விவசாயிகள்

வருகின்றனர். அவர்கள் மூலம் கடந்த மாதத்தில் 70 முதல் 75 டன் காய்கறி வந்தது. தற்போது 75 முதல் 80 டன் காய்கறி வருகிறது. தினசரி ரூ.22 லட்சத்திற்கு குறையாமல் விற்பனையாகிறது. பொதுமக்கள் வருகை அதிகரித்ததற்கு காரணம், கடந்த மாதம் பள்ளி விடுமுறை காரணமாக பொதுமக்கள் பலர் பிற ஊர்களுக்கு சென்றதால் வருகை குறைந்தது. தற்போது பள்ளி திறக்கப்பட்டுள்ளதால் இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. காய்கறி வரத்து அதிகரித்ததற்கு காரணம், கடந்த மாதம் பெய்த மழையால் பெரும்பான்மையான காய்கறி மகசூல் அதிகரித்து, வரத்து அதிகரித்துள்ளது என்கின்றனர் உழவர் சந்தை நிர்வாகிகள்.

பழநியில் மழை அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

பழநி, : பழநி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் கடந்த சில தினங்களாக மாலை நேரங்களில் மழை பெய்து வருகிறது. இதனால் பழநி பகுதியின் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு ஆதாரமான கோடைகால நீர்த்தேக்கம், பாலாறு அணை, வரதமாநதி அணை மற்றும் குதிரையாறு அணைகளுக்கு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இம்மழையின் காரணமாக பாலசமுத்திரம், நெய்க்காரப்பட்டி, சண்முகநதி மற்றும் கரிக்காரன்புதூர் பகுதிகளில் ஏராளமான விவசாயிகள் நடவுப்பணியில் ஈடுபட்டுள்ளனர். இம்மழை நெல் நடவில் ஈடுபட்டுள்ள விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தொடர்மழை காரணமாக பகல் பொழுதுகளில் வீசி வந்த அனல் காற்று நீங்கி, குளிர்காற்று வீசி வருகிறது. ரயிலடி சாலை, இட்டேரி சாலை, கவுண்டன்குளம் பகுதிகளில் போதிய வடிகால் வசதி இல்லாததால் மழைநீர் தேங்கி உள்ளது. நேற்றும் மாலை நேரத்தில் மழை பெய்தது. இதனால் பள்ளி முடிந்து வீடு திரும்பிய மாணவர்கள் மழையில் நனைந்தபடி சென்றனர். பழநி கோயிலுக்கு சாமி தரிசனம் செய்ய வந்திருந்த பக்தர்கள் மழையின் காரணமாக ஆங்காங்கே உள்ள கடைகளில் தஞ்சமடைந்திருந்தனர்.

**விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம்**

பழநி, : பழநியில் உள்ள ஒழுங்குமுறை விற்பனை கூட்டத்தில் நேற்று விவசாயிகளுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது. திண்டுக்கல் மாவட்டத்தில் பழநி, திண்டுக்கல், நத்தம், வத்தலக்குண்டு, ஒட்டன்சத்திரம் ஆகிய இடங்களில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் உள்ளன. விவசாயிகள் தாங்கள் அறுவடை செய்த விளைபொருட்களுக்கு கூடுதல் விலை கிடைக்க இவ்விற்பனைக் கூடங்களை அணுகலாமென தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை வியாபாரிகள் மற்றும் விவசாயிகள் தெரிந்து கொள்வதற்காக பழநி விற்பனைக்கூடத்தில் நேற்று விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.

திண்டுக்கல் விற்பனைக்குழு செயலாளர் சையது இப்ராஹிம் முன்னிலை வகித்து விற்பனைக்குழுவின் திட்டப்பணிகள் குறித்து எடுத்துரைத்தார். வேளாண் அலுவலர் காளிமுத்து வரவேற்றார். அபீடா நிறுவனத்தின் உதவி பொதுமேலாளர் தங்கம் ராமச்சந்திரன் விவசாயிகள் குழுவாக பதிவு செய்து, அதன் மூலம் விளைபொருட்களை ஏற்றுமதி செய்வதால் ஏற்படும் நன்மை குறித்து விளக்கம் அளித்தார். பொருளீட்டுக் கடன், உழவர் நலத்திட்டம், குளிர்பதன கிட்டங்கி, நவீன கிட்டங்கி, ஆகியவை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. உதவி வேளாண் அலுவலர் ரேவதி நன்றி கூறினார்.

**சுற்றுச்சூழல் தின விழா ஓவிய போட்டிகள்**

உடுமலை,: உலக சுற்றுச்சூழல் தினவிழா ஆண்டுதோறும் ம் தேதி (இன்று) கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, உடுமலை கலிலியோ அறிவியல் கழகம் சார்பில் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு போட்டி மற்றும் ஒருநாள் அறிவியல் சார் பயிற்சி பட்டறை நாளை (6ம்தேதி) உடுமலை சின்னவீரம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் காலை 10 மணி

முதல் மாலை 4 மணி வரை நடத்தப்பட உள்ளது. நாளை காலை 10 மணி அளவில் 6,7 மற்றும் 8ம் வகுப்பு மாணவ,மாணவிகளுக்கு இன்றைய நிலையில் சுற்றுப்புறச்சூழல் என்ற தலைப்பிலும், 9 மற்றும் 10ம் வகுப்பு மாணவர்களுக்கு புவிவெப்பமாதலும் மனித நடவடிக்கைகளும் என்ற தலைப்பிலும் 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவ,மாணவிகளுக்கு உலகை அச்சுறுத்தும் பாலீத்தீன் மற்றும் பிளாஸ்டிக் என்ற தலைப்பில் பேச்சுபோட்டி நடைபெற உள்ளது.பிற்பகல் 1.30 மணி அளவில் 6,7மற்றும் 8ம் வகுப்புக்கு வனமும் வளமும் என்ற தலைப்பிலும், 9 மற்றும் 10ம் வகுப்புகளுக்கு இயற்கையும் மனிதனும் என்ற தலைப்பிலும், 11 மற்றும்12ம் வகுப்பு மாணவ,மாணவிகளுக்கு உனது பார்வையில் புவி மாசுபாடு என்ற தலைப்பிலும் ஓவியபோட்டி நடைபெற உள்ளது. தொடர்ந்து சுற்றுச்சூழல் பயிற்சி பட்டறையில் சுற்றுச்சூழல் சார்பான குறும்படங்கள் மற்றும் பவர்பாயிண்ட் காட்சிகள், எளிய அறிவியல் பரிசோதனைகள், கணக்கும் இனிக்கும் செயல்பாடுகள் குறித்த விளக்கம் அளிக்கப்படும் போட்டிகளில் பங்கேற்கும் அனைத்து மாணவர்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும் மேலும் தகவல்களுக்கு கலிலியோ அறிவியல் கழகத்தை 99424 67764, 99656 44666 ஆகிய செல்போன்களில் முன்பதிவு செய்யலாம்.

**புதுகை மாவட்டத்தில் கோடை, சம்பா நெல் சாகுபடிக்கு 1321 மெட்ரிக் டன் கிரிப்கோ யூரியா ரயில் மூலம் வந்து சேர்ந்தது**

புதுக்கோட்டை, : கோடை மற்றும் சம்பா சாகுபடிக்காக புதுக்கோட்டை மாவட்டத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 1321 மெட்ரிக் டன் கிரிப்கோ யூரியா மூட்டைகள் தூத்துக்குடியில் இருந்து ரயில் மூலம் புதுக்கோட்டைக்கு வந்து சேர்ந்தன. இவற்றை கலெக்டர் கணேஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். புதுக்கோட்டை மாவ ட்டத்தில் பரவலாகப் பெய்த கோடை மழையால் பல்வேறு கண்மாய்களில் தண்ணீர் நிரம்பியுள்ளது. இது மானாவாரி சாகுபடியில் ஈடுபடும்

விவசாயிகளுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். கோடையில் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ள பயிர்களுக்கும் சம்பாவில் சாகுபடி செய்ய உள்ள பயிர்களுக்கும் சேர் த்து தேவையான அளவு யூரியாவை அனைத்துத் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களிலும் இருப்புவைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டது. இதன்படி, புதுக்கோட்டை டான்பெட் நிறுவனத்துக்கு சென்னை, வேளாண் இயக்குநர் அலுவலகத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டு தூத்துக்குடியில் இருந்து ரயில் மூலம் அனுப்பிவைக்கப்பட்ட 1321 மெட்ரிக் டன் கிரிப்கோ யூரியா மூட்டைகள் புதுக்கோட்டையை நேற்று வந்தடைந்தன. இவற்றை கலெக்டர் கணேஷ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.குறிப்பாக, கிரிப்போ யூரியா உர மூட்டை ஒவ்வொன்றும் 50 கிலோவுக்கு குறைவு இல்லாமல் எடை உள்ளதா என கிரிப்கோ நிறுவன விற்பனை அலுவலரிடம் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார். புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 62 தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு 1068 மெட்ரிக் டன் வீதம் அனுப்பவும் மற்றும் 253 மெட்ரிக் டன் டான்பெட் குடோனில் இருப்பு வைக்கவும் ஏற்பாடு செய்யும் படி உத்தரவிட்டார்.

மேலும் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு அனுப்பப்படும் யூரியா உரத்தை விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுவதை வேளாண் துறை அலுவலர்கள் கண்காணிக்கவும், விவசாயத்துக்கு அல்லாத தொழிலுக்கு யூரியா பயன்படுத்தப்படுவதைத் தடுக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.ஆய்வின் போது வேளாண் இணை இயக்குநர் (பொ), சதானந்தம், வேளாண் தரக் கட்டுப்பாட்டு உதவி இயக்குநர் திருப்பதி, டான்பெட் நிறுவன அலுவலர், கிரிப்கோ நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் உடனிருந்தனர்.

**உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடக்கம்**

ஈரோடு, : சென்னிமலை ஒன்றியம் கவுண்டச்சிபாளையம் ஊராட்சி புதுவலசு கிராமத்தில் மகளிர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் தொடங்கப்பட்டது. ஈரோடு வேளாண் வணிக துணை இயக்குநர் சுப்பிரமணியன் கலந்து கொண்டு நல்லெண்ணெய் விற்பனையை தொடங்கி வைத்தார். சென்னிமலை வட்டார வேளாண் அதிகாரி (வேளாண் வணிகம்) சண்முகசுந்தரம் நிறுவனத்தின் நடவடிக்கை குறித்து விளக்கிப் பேசியதாவது: வேளாண் வணிக துறை ஆலோசனை படி இந்நிறுவனம் செயல்படுகிறது. இதில் 1000 உறுப்பினர்களை சோக்க இலக்கு நிர்ணயித்ததில் இதுவரை 300 பேரை சேர்ந்துள்ளனர். விவசாய உற்பத்தி பொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்தல், வேளாண் வணிகம் செய்தல் ஆகியவற்றில் கிடைக்கும் லாபத்தை அனைத்து உறுப்பினர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பதை நோக்கமாக கொண்டு இந்நிறுவனம் செயல்படுகிறது. இதில், 10 பேர் கொண்ட குழு நிர்வாக இயக்குநர்களாக இருப்பார்கள். இவ்வாறு சண்முகசுந்தரம் பேசினார். விழாவில் மகளிர் உழவர் உற்பத்தியாளர்கள் நிறுவன நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

**விவசாயிகள் இயற்கை விவசாயத்திற்கு மாற வேண்டும் சுற்றுச்சூழல் தின விழா கருத்தரங்கில் வலியுறுத்தல்**

ஊட்டி, : நீலகிரி சுற்றுச்சூழல் மற்றும் கலாசார சேவை அறக்கட்டளை மற்றும் சிஎஸ்ஐ., சிஎம்எம்., பள்ளி தேசிய பசுமைப்படை மாணவர்கள் சார்பில் உலக சுற்றுச்சூழல் தின விழா மற்றும் கருத்தரங்கு நடந்ததுவிழாவில், ஹென்னா ரூத் வரவேற்றார். வளர்மதி வினோதா தலைமை வகித்தார். பாரம்பரிய தானியங்களும், உடல் ஆரோக்கியம் மற்றும் பல்லுயிர் பாதுகாப்பின் முக்கியத்துவம் குறித்து சிறப்பு கருத்தரங்கு நடந்தது. இதில், நெஸ்ட் அறக்கட்டளை நிர்வாகி சிவதாஸ் பேசியதாவது: நீலகிரி மாவட்டம் வன வளத்திற்கும், மண் வளத்திற்கும்

குறையில்லாமல் உள்ளது. இங்கு நிலவும் தட்ப வெப்பநிலை விவசாயத்திற்கு ஏற்றது. இந்த நிலங்களில் விளையும் காய்கறிகள் அனைத்தும் உலகத் தரம் வாய்ந்தவை. இங்கு, தற்போது ஓரின சாகுபடி முறையில் விவசாயம் மேற்கொள்ளப்படுகிறது. இதனால், பாரம்பரிய பயிரினங்கள் அழியும் அபாயம் உள்ளது. நீலகிரியின் பல்லுயிர் தன்மை கேள்வி குறியாகியுள்ளது. ஆண்டு தோறும் பெய்யும் பருவமழையின் போது மேல் மண் அடித்து செல்லப்படுகிறது. இதனால், விவசாயம் பாதிக்கிறது. பாரம்பரிய விவசாயம் அழிந்து வரும் நிலையில், பழங்குடியின மக்களின் கலாசாரமும், வாழ்க்கை முறையும் அழியத்துவங்கியுள்ளது. மண் வளத்தையும், மனித ஆயுளையும் நீடிக்க செய்யும் பரம்பரிய விைதகளை விவசாயத்தில் அறிமுகம் செய்வது அவசியமாகிறது.கம்பு, தினை, கேழ்வரகு, கோதுமை, பீன்ஸ் வகைகள், குறைந்த நீர் ஆதாரத்தில் விளையும் பயிர்களை நாம் விவசாயத்தில் மீண்டும் அறிமுகம் செய்வது அவசியம்.

அதிகரித்து வரும் ரத்தசோகை, நீரழிவு, உடல் பருமன், ரத்த அழுத்தம் போன்ற நோய்களை கட்டுப்படுத்த பாரம்பரிய உணவு முறை அவசியம். மேலும், பறவையினங்களின் வளர்ச்சிக்கும், அயல் மகரந்தம் நடைபெற முக்கியத்துவம் வாய்ந்த பூச்சியினங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போது தான் பல்லுயிர் தன்மை வளம் பெறும். எனவே, நீலகிரி மாவட்டத்தில் மீண்டும் பழங்காலம் போல், இயற்கை விவசாயத்திற்கு விவசாயிகள் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். தேசியத்தின் பொருளாதாரத்தை ஊக்குவிக்க வேண்டும்.இவ்வாறு அவர் பேசினார். முடிவில், சுகந்தி நன்றி கூறினார். இதில், பள்ளி ஆசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.